விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 15 ஞாயிற்றுக்கிழமை (31.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 255

# மாணவிகள் மூவர் குளத்தில் மூழ்கிப் பலி

## வரட்சியால் குளிக்க சென்று பரிதாபம்



நவதாரணி



நிசாந்தினி



தாட்சாயினி



கிளிநொச்சி கந்தன் குளம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி செல்வநகர் பகுதியை சேர்ந்த மாணவிகள் மூவர் குளத்தில் குளிக்கச் சென்ற வேளை சேற்றினுள் புதையுண்டு மூச்சுத் திணறி பரிதாபமாக உயிழந்துள்ளனர்.

இச் சோகச் சம்பவம் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் கிளிநொச்சி கந்தன்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் பாலசரவணபவன் நவதாரணி (வயது 16) அவரது சகோதரியான ஜெயந்தி நகர் இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் 3இல் கல்வி பயிலும் பாலசரவணபவன் தாட்சாயினி (வயது 8) மற்றும் ஜெயந்தி நகர் இந்துக் கல்லூரியில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் ரத்னராசா நிசாந்தினி (வயது 16) என்ற மூவருமே உயரிழந்தவர்களாவர்.

கிணற்றில் வரட்சி காரணமாக நீர் மட்டம் குறைவாக காணப்படுவதனால் குளத்தில் குளிப்பதற்காக நேற்று பிற்பகல் கிளிநொச்சி செல்வநகர் பகுதியை சேர்ந்த நான்கு பெண்கள் சென் 23ஆம் பக்கம் பார்க்க....

# சிறுபான்மையினர் ஒடுக்கப்படுகின்றனர்

## ஐ.நா.பொதுச் செயலாளர் மூன் கவலை

(ஜெனிவா) இலங்கையில் சிறுபான்மை மதங்கள் மீதான ஒடுக்குமுறைகள், பௌத்த கடும் போக்குவாதிகளின் வன்முறைகள், மக்களின் பாதுகாப்பு நலன்சார்ந்த விடயங்கள் மோசமான நிலையில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செலயலாளர் பான் கீ மூன் கவலை வெளியிட்டுள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க....

## 208 பவுண் நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்துச் செல்லும் பல கொள்ளைச் சம்பவங்களால் மக்கள் மத்தியில் பெரும் அச்சவுணர்வு ஏற்பட்டுள்ளது.

நேற்றும் யாழில் இடம்பெற்ற இரு வேறு கொள்ளைச் சம்பவங்களில் 208 பவுண் நகையும். வெளிநாட்டு நாணயங்கள் உட்பட சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவங்கள்தொடர்பாகமேலும் தெரியவருவதாவது. யாழ்ப்பாணம் பலாலி வீதி. கோண்டாவில் டிப்போ பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற திருமணச் சடங்கினை இலக்கு வைத்து கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை நடைபெற்ற இச் சம்பவத்தில் 23ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல் போனோரை கண்டுபிடிக்க வலுவான பொறிமுறை அவசியம்

### சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் காணாமற்போனவர்களைக கண்டுபிடிக்க வலுவான பொறிமுறை ஒன்று உடனடியாகத் தேவை என்று சர்வதேச மனனிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யப்பட்டோருக்கு நீதியும் உண்மையும் மிகவும் அவசியம் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய இயக்குநர் ரிச்சர்ட் பெனாட் ஐ.நாவின் 23ஆம் பக்கம் பார்க்க....

D.C.M
A/L தொழில்நுட்பப்பிரிவு
2016, 2015
Science Tech - ஜெனா, ராம்
Eng - Tech - ராம்
Bio - Tech - விக்கி, கிசோக்
ICT - Tech - சிவா (C-8371)
யாழ் நகர் / சுன்னாகம் } இரு இடத்திலும்
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான
Spoken English
V. பிரபாகரன்
சிங்கள வகுப்புகளும் ஆரம்பம்
(விபரங்கள் அலுவலகத்தில்)

## காணாமல் போனோர் போராட்டத்தின் ஊர்வலம் பொலிஸாரால் தடுப்பு



(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோருக்கான சர்வதேச தினத்தையொட்டி வவுனியாவில் வட மாகாணத்தின் ஐந்து மாவட்ட பிரஜைகள் குழு மற்றும் காணாமல் போனோரின் உறவுகளின் இணையம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஊர்வலத்திற்கு பொலிஸார் தடை விதித்தமையால் மகஜர் கையளிக் 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள் - அன்பளிப்பு பொருட்கள் - உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-8365)



நல்லூர் வாழ் மக்களுக்காக ஓர் புதிய உதயம்

## பசுமை பாற்சாலை

- தரமான பால்
- நடமாடும் சேவை

உடன் நாடுங்கள் பல சலுகைகளுடன் பெற்றுக் கொள்ள

யாழ். மாநகர சபை முன்பாக.

(7544)



## காணி விற்பனைக்கு

11/2 பரப்புக் காணி கனால் வீதி மாதகலில் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
0771707294

(7542)


## நெடுந்தீவில் டொல்பின்



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்கரையில் இறந்த நிலையில் டொல்பின் ரக மீன் ஒன்று கரை யொதுங்கியுள்ளது.

நேற்று சனிக்கிழமை காலை இந்த டொல்பின் கரையொதுங்கியதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தடொல்பினை பெருமளவானபொது மக்கள் பார்வையிட்டனர். கரையொதுங்கியடொல்பினை அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் குழி வெட்டி புதைத்துள்ளனர். (செ-1)


After A/L...
## Management in Jaffna

சாதாரண தர, உயர்தரக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கான இலவச முகாமைத்துவ பயிற்சி (Marketing Management)

**பயிற்சிக் காலம் 6 மாதங்கள் மட்டும்.**
**பயிற்சிக் காலங்களில் முறையான ஊதியம் வழங்கப்படும். (10000/-)**
**பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனத்துடன் மாதாந்தம் ரூ.60000/- பெறலாம்.**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச வலையமைப்பைக் கொண்ட நிறுவனத்திற்கு 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

0777 274795/ 021 5686466/ 73, St.Annes Church Road, Chundikuly, Jaffna.

(C-8368)



## E-CITY
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன....

DIPLOMA IN ENGLISH

IELTS
A1/A2/B1/B2
SINHALA

City & Guilds APPROVED CENTRE

ஆரம்பம்: 06.09.2014 காலை 9.30 மணி

சனி/ஞாயிறு தினங்களில் பாடநெறிகள் இடம்பெறும்

இலங்கையின் முதற்தர ஆங்கிலக் கல்லூரி

இல.372D, பருத்தித்துறை விதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(முதலாவது மாடி, வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)
0212217106 / 0773400418 / 07747924166 :: www.ecityenglish.com

(C-8367)



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS

## After A/L What Next???

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும். இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

### Spoken English With Grammar - Quick Learning Course

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

### Diploma In English

Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

### B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

### IELTS Acadamic/General

We do Official Online Registration for Exam Candidates

Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

### A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Duration: (2 Months)

(C-8364)

01.09.2014 @ 9.00 am
03.09.2014 @ 9.00 am
05.09.2014 @ 3.00 pm
06.09.2014 @ 8.00 am

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel :021 222 4550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207

Hot Lines : 0777585913, 0777222422, 0714299935


## மரண அறிவித்தல்



### திருமதி கண்ணகாதேவி உருத்திரசுந்தரம்

(ஓய்வுநிலை சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் )
சித்த மருத்துவத்துறை - யாழ்.பல்கலைக்கழகம்)

கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணகாதேவி உருத்திரசுந்தரம் 29.08.2014 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், உருத்திரசுந்தரம் (ஓய்வுநிலை சாலை முகாமையாளர் காரைநகர் டிப்போ) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், கோகிலா (ஆசிரியை யா/குருசாமி வித்தியாலயம் கைதடி), தவபாலன் (கணனிப் பிரயோக உதவியாளர் யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கேதீஸ்வரன் (ஆசிரியர் யா/நாவற்குழி ம.வித்), நிரோஜினி (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், தெல்லிப்பளை) ஆகியோரின் அன்பு மாமியும், கிருஷாந்த், லக்சயன், கிருஷ்மன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், முத்துக்குமாரசுவாமி காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் நாகபூசணிஅம்மாள், காலஞ்சென்றவர்களான நாகேந்திரன், சுங்காதரன் மற்றும் நடேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான லோகசுந்தரம், சோமசுந்தரம், தங்கபூரணம் மற்றும் விஜயசுந்தரம், சௌந்தரம், யோகராசா, தியாகராசா, சோமசேகரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலம் வீதி,
கைதடி மேற்கு, கைதடி.
021 205 7900

(7534)

தகவல்:
குடும்பத்தினர்.


## (Goethe தவிர்ந்த) இலங்கை ரீதியில் முதல் இடத்தை தட்டிச் சென்ற கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி



சித்தியடைந்த மாணவர்களை இப்படத்தில் காணலாம்




ஜேர்மன் A1 பரீட்சை நடத்தும் முகாமையாளருடன் எமது ஜேர்மன் கல்லூரியின் ஆசிரியர் திரு.கோணேஸ்வரன் அவர்கள்

ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தப்பட்ட வெளிநாடு செல்பவர்களுக்கான A1 பரீட்சையில் முதலாவது இடத்தை தட்டிக் கொண்டது கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி. 09.07.2014 அன்று கொழும்பில் Goethe தவிர்ந்த இலங்கை ரீதியிலான A1 பரீட்சையில் கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரியின் ஊடாக தோற்றிய மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைதட்டிக் கொண்டது இந்நிறுவனம்.

பல வருடங்களாக யாழ்.மண்ணில் பிரபல்ய ஆசிரியர் S.கோணேஸ்வரனின் வழிகாட்டலினால் பல மாணவர்களை சித்தியடையச் செய்து பெருமை சேர்த்துள்ளார் யாழ்.மண்ணுக்கு.

இம்முறை மட்டுமல்லாது ஒவ்வொரு பரீட்சையிலும் பல மாணவர்கள் சித்தியடைவது குறிப்பிடத்தக்கது. இந் நிறுவனமானது ஜேர்மன் செல்பவர்களுக்கு ஒரு சொப்பனமாக விளங்குகின்றது.



ஆசிரியர் S.கோணேஸ்வரன் அவர்களுடன் இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்ற மாணவன்

மற்றும் போலியான விளம்பரங்களை கண்டு ஏமாந்து போகாதீர்கள்

(7493)

German Language Academy ஆரியகுளம், யாழ்ப்பாணம். 0779707322

# பட்டத்தை பறிகொடுத்த அழகி!

## பொய் கூறியதாக புகார்

ஆசிய பசுபிக் உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் ஒருவர் தனது அழகிப் பட்டத்தை பறிகொடுத்துள்ளார்.

மரியாதையற்ற முறையிலும் நேர்மையற்ற முறையிலும் நடந்து கொண்டுள்ளதாக குற்றம் சாட்டியே அவரது அழகிப் பட்டம் பறிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரிலிருந்து முதல் பெண்ணாக, 18 வயதான மே மியட் நோ கடந்த ஆண்டு அழகிப் போட்டியில் வெற்றிபெற்றிருந்தார்.

ஒரு இலட்சம் டொலர்கள் பெறுமதியான கிரீடம் ஒன்று அவருக்கு வழங்கப்பட்டதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

"பொய்" கூறியதன் மூலம், அழகி ஒருவருக்கான ஆளுமையையும் நாணயத்தையும் அவர் இழந்துவிட்டதாக கடந்தவாரம் அவருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் காணாமற் போய்விட்டதாக அழகிப் போட்டி ஏற்பாட்டுக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ)


**தேவை**

கட்டட நிர்மாணத்துறையில் பல வெற்றிடம் (கொழும்பு/கிளிநொச்சி/முல்லைத்தீவு/கண்டி/கொழும்பை அண்மித்த பிரதேசம்) மேசன்/பெயின்டர்/கம்பிபாஸ்/ டயில் பாஸ்/ செடலின் பாஸ்/ தச்சு (1200/=-1500/=) கையுதவியாளர் (800/=1100/=) தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்பு:-0776838231/0771116770

**CIMA**
Chartered Institute of Management Accountants
@ Wisdom
021 2220727 | 021 7200777


**Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்**

சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.
கரவீணா இசை மன்றம், இல.04, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
TP:-0777031293 (7537)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

கிளிநொச்சி இரணைமடு சந்திக்கு அருகில் வீட்டுடன் காணி விற்பனைக் குண்டு.
தொடர்பு:-077 537 3256 (7526)





# இராசி பலன்

**31.08.2014**
**ஆவணி 15, ஞாயிற்றுக்கிழமை**
**சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு**
**சஷ்டி பின்னிரவு 1.29 மணிவரை**
**சுவாதி பிற்பகல் 2.52 மணிவரை**
**இராகுகாலம் 4.35-6.05 மணிவரை**
**சுபநேரம் 9.05-10.35 மணிவரை**
**சஷ்டிவிரதம், 3ஆம் ஆவணி ஞாயிறு**

**வளவன்**

**மேடம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உடல் நலன் சீராகும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**இடபம்:** கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், சுவாரஸ்யமான நாள், போசன சுகமுண்டு, பகைவர்கள் விலகுவர், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**மிதுனம்:** நன்மைகள் நாடிவரும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெற்றோர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சுப காரியப் பேச்சுக்கள் முன்னேற்றம் தரும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணவேண்டிய நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு, சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், சுப செலவுகள் கூடும்.

**துலாம்:** தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், முயற்சிகளை முடிக்க சற்று அலைய நேரிடலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், விருந்துகளில் கலந்து மகிழும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மகரம்:** வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்புண்டு, போசன நன்மையுண்டு, வருமானம் திருப்திகரமாக அமையும்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்நாள், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், பேச்சைக்குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்கவேண்டிய நாள், செலவுகள் அதிகமாகும், பயணங்களின்போது விழிப்புணர்வு அவசியம், தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

# மரண அறிவித்தல்



திருமதி

## யோகம் செல்லத்துரை

(மத்தொனி, கரவெட்டி)

மத்தொனி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம் செல்லத்துரை நேற்று (30.08.2014) இறை பதம் எய்திவிட்டார்.

அன்னார் ஆழ்வார் செல்லத்துரை (ஓய்வு பெற்ற முகாமையாளர் - மக்கள் வங்கி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை இலட்சுமி தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஆழ்வார் தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகளும், இளம்பிறைநாதன் (யாழ்.மாநகரசபை), சத்தியபாமா (இலண்டன்), பிரணவநாதன் (ஆணையாளர் யாழ்.மாநகரசபை), சசிகலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பார்வதி (கனடா), காலஞ்சென்ற அம்மா, கந்தசாமி (சட்டத்தரணி), காலஞ்சென்ற தேவி ஆகியோரின் அருமைச் சகோதரியும், கந்தசாமி, காலஞ்சென்ற இராஜதுரை, சிவஞானம், இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமகள், கிருஷ்ணராஜா (இலண்டன்), சிந்துஜா (ஆசிரியை பாசையூர் சென் அன்ரனீஸ் வித்தியாலயம்), பிரபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், திலோத்தமா, சங்கனி, ஆசினி, ஹரீஷ், துளசி, ஔவை, சுல்கி, துஷா, அதிர்ஷன் ஆகியோரின் அருமை பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைக்ள் இன்று (31.08.2014) ஞாயிற்றுக்கிழமை இல. 35/7, வில்வம் தெரு அரியாலையில் உள்ள இல்லத்தில் மு.ப 11 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக அரியாலை சிந்துபாத்தி இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
செ.பிரணவநாதன்
(ஆணையாளர் யாழ்.மாநகரசபை)

தொடர்புகளுக்கு:
0718627614, 0773678731

(7545)

# இதய அஞ்சலி



திருமதி **மகாலக்சுமி இராசலிங்கம்**

(இலண்டன்)

ஒரு தோப்பில் மரமாகி
வானுயர கிளை நீட்டி
விழுதுவிட்டு எமை நிலைநிறுத்தி
அன்புதனை அமுதாய் சுரந்த
எம் இனிய அன்னையே!

இறுகப் பற்றிய எம் கைகளை
நழுவவிட்டு விட்டு நீங்கள்
தன்னந்தனியே – நாம்
தவித்தழுது நிற்க
வானுயரச் சென்றதேன்?

வேல்பட்ட மான்களாய்
உமை இழந்து துடிக்கின்றோம்
மீண்டும் எம் தோப்பில்
விருட்சமாய் விழுதுவிட்டு
எமைத் தாங்க வர வேண்டும்

எங்கள் அன்னைக்கு எமது இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்

தியாகராஜா ஸ்ரோர்ஸ் (காலி)
கே.எம்.ரி.ரேடர்ஸ் (கொழும்பு)

(சி-8370)

# மரண அறிவித்தல்



திருமதி

## மகாலக்சுமி இராசலிங்கம்

வேலணை மேற்கை பிறப்பிடமாகவும் 84, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலக்சுமி இராசலிங்கம் அவர்கள் 22.08.2014 வெள்ளிக்கிழமை அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாதவூர்-அன்னம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை-சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இராசலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, அருணகிரி (முன்னாள் வர்த்தகர், அருணா பீடி, வரக்காப்பொல), செல்வநாயகம் (முன்னாள் வர்த்தகர், அருணா பீடி, வரக்காப்பொல) மற்றும் வரலக்சுமி (கனடா), காலஞ்சென்ற திருச்செல்வம் (முன்னாள் வர்த்தகர், யுனிக் குரோசரிஸ், காலி), காலஞ்சென்ற தவச்செல்வம் (சாய்ராம் கன்ராக்டர்ஸ்), அருட்செல்வம் (NSPS, கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தியாகராஜா (முன்னாள் வர்த்தகர் T.T ஸ்ரோர்ஸ், காலி), திலகவதி (கனடா), பாலாம்பிகை (கனடா), காலஞ்சென்ற இராஜதுரை (முன்னாள் வர்த்தகர், L.P.T, கொழும்பு), தவமணி (கனடா), புஸ்ப காந்தி (இலங்கை), புவனேஸ்வரி (இலங்கை) காலஞ்சென்ற சொர்க்கலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரஞ்சிதமலர் (நெதர்லாந்து), மனோகரலிங்கம் (லண்டன்), மகேந்திரலிங்கம் (கனடா), சற்குணலிங்கம் (கனடா), ரதிமலர் (ஜேர்மனி), காந்தமலர் (லண்டன்), காலஞ்சென்ற லிங்கேஸ்வரி, சிதம் பரலிங்கம் (லண்டன்), விக்னேஸ்வரலிங்கம் (கண்ணன்- யாழ்ப்பாணம்), சண்முகலிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலசுப்ரமணியம் (நெதர்லாந்து), செல்வராணி (லண்டன்), சொர்ணமலர் (கனடா), சாந்தினி (கனடா), அருணகிரிநாதன் (ஜேர்மனி), சுதாகரன் (லண்டன்), வாசுகி (லண்டன்), விஜயதட்சனி (யாழ்ப்பாணம்), நவஜீவிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மேகலா, காண்டீபன், திருமகள், கோபிநாத், பானுமதி (நெதர்லாந்து), அபிலாஷ், அபிலன் (லண்டன்), நிலோஜன், மிதுசா (கனடா), அபிராம், அனிதா (ஜேர்மனி), நிகிலேஷ், சஞ்சிதா (லண்டன்), துளசிகா, கானகன் (லண்டன்), அபூர்வா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காசியினியின் (நெதர்லாந்து) அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (31.08.2014) இன்று லண்டனில் முற்பகல் 9.00 மணியளவில் (இலங்கை நேரம் பிற்பகல் 1.30) நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 0778792384

(7535)

தகவல்:
கண்ணன் (மகன்)

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள்சேவை

THIRUMURUGEN COM NET (PVT) LTD.

திருமுருகன் கொம்நெற் (பிறைவெட்). லிமிட்டெட்

- 11kg விற்கு மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
- தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள்
- CD, DVD என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
- 220 நாடுகளுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
- 3-5 வேலைநாட்களில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.

இல. 271A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835

TCN Express
2b Nelsan Place,
Colombo - 6.

Packing & Courier

20 வருடங்களுக்க மேல் முதன்முதலில் எமது நிறுவனம் பொதிகள் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக தனி இடம் பிடித்துள்ளது.

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, சங்கானை. (வைத்திலிங்க கட்டிடம் மேல்மாடி, ஆசை பிள்ளை நகைக்கடை முன்பாக)

குறிப்பு: எமது நிறுவனம் இங்கே குறிப்பிடப்பட்ட இடங்களில் மட்டுமே இயங்குகின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

# சூரியப் பிழம்புகளினால் பூமிக்கு அதிக பாதிப்புக்கள்!

சூரியனில் மிக வீரியமான பிழம்புகள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. அந்தச் சூரியப் பிழம்புகளால் பூமிக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று பிரபல விண்வெளி ஆய்வு மையமான நாசா எச்சரிக்கை விடுத்துள்ளது.

சூரியனில் எப்போதும் நடுக்கம் இருந்து கொண்டே இருக்கும். அப்போது அதிலிருந்து நெருப்புக் கோளங்கள் தோன்றும். இந்தச் சூரிய நடுக்கம் ஒவ்வொரு 11 ஆண்டுகளு கக்கும் உச்சத்தை அடையும். அப்போது அதன பிழம்புகள் மிக வீரியத்துடன் இருக்கும்.

வெளிப்படும் சில நெருப்புப் பிழம்புகளின் அளவு பூமியின் அளவைப் போன்று 14 மடங்கு அதிகமாக இருக்கும். அதிலிருந்து கதிரியக்கமும் ஏற்படும்.

சூரிய நடுக்கம

இந்தச் சூரிய நடுக்கம் தற்போது உச்சத்தை அடைந்துள்ளது. சமீபத்தில் அமெரிக்காவில் உள்ள விண்வெளி மையமான நாசா தன்னிடம் உள்ள 'சோலார் டைனமிக்ஸ் அப்சர்வேட்டரி அண்ட் சோலார் ஹீலோஸ்பெரிக் அப்சர் வேட்டரி" எனும் கண்காணிப்புக் கருவி மூலம் சூரிய நடுக்கத்தை ஆராய்ந்து உறுதி செய்துள்ளது.

இதுபற்றி நாசாவின் செய்தித் தொடர்பாளர்கேரன்ஃபோக்ஸ் கூறும்போது, இந்தச் சூரியப் பிழம்புகள் பூமியில் உள்ள ஜி.பி.எஸ். மற்றும் இதர தொலைத்தொடர்பு சிக்னல்களைப் பாதிக்கும் என்று கூறியுள்ளார்.

பாதிப்புகள் தொடரும்

நாளடைவில் சூரியப் பிழம்பு கள் குறைந்துகொண்டே வந்தாலும் கூட சூரிய நடுக்கம் அதன் குறைந்தபட்சஅளவை அடையும்வரை இந்தப் பிழம்புகளின் தாக்கம் பூமிக்குப் பாதிப்பை ஏற் படுத் திக் கொண்டே இருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ,இதனால் மனிதர்களுக்கோ, பூமியில் உள்ள பிற உயிரினங்களுக்கோ எந்த பாதிப்பும் ஏற்படாது.

இதைத் தொடர்ந்து அமெரிக்க இராணுவம் தன் தரை, கடல் மற்றும் வான்வழி தொலைத் தொடர்பு சாதனங்களை எல்லாம் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டிரு ப்பது குறிப்பிடத்தக்கது. (இ)


## IELTS ஆங்கில வகுப்புக்கள்

பிரபல ஆங்கில விரிவுரையாளர் றோய் சேர் (Roy Sir) யாழ். வருகிறார். சிறந்த ஆங்கில அறிவை குறுகிய காலத்தில் பெற்று உலகத்தோடு உங்களை இணையுங்கள்.



சர்வதேச விசாவுக்காக எதிர் பார்க்கும் பயிற்சி ஆறு வாரங்களில் கற்றுத் தரப்படும். வார இறுதி நாட்களிலே வகுப்புக்கள் இடம் பெறும்.

தனிப்பட்ட கவனிப்புப் பயிற்சி காலங்களில் சிறு பரீட்சைகள் சித்தியடைவதற்கான நுட்பங்கள் அனைத்தும் கற்பித்தலில் இடம்பெறும்.

மேலும் பொது ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறவும் வகுப்புக்கள் நடத்தப்படும். இதற்கான காலவரையறை மாணவர்களது தராதரத்தை ஒட்டியே நிர்ணயிக்கப்படும். யாவற்றுக்கும் மேலாக மூன்று மாத காலங்களில் ஆங்கிலம் சரளமாக பேச கற்பிக்கப்படும்.

**வகுப்புக்கள் ஆரம்பம்-05.09.2014 வெள்ளிக்கிழமை**



**தொடர்புகளுக்கு:**
**யாழ்.பருத்தித்துறை வீதி (சோமஸ்கந்த கல்லூரி முன்பாக) புத்தூர்.**
**077 323 3181**
**075041 6757**



(7518)



## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

ஓர் அரிய சந்தர்ப்பம்

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பினை எதிர்பார்க்கும் தொழில் திறனுள்ள ஆண்களுக்கு ஓர் நல்ல வாய்ப்பு.

கொழும்பில் அமைந்துள்ள எமது சுப்ரா வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் (ஏஜென்சி) ஊடாக 200 நபர்களுக்கும் அதிகமானோருக்கு வேலைவாய்ப்புக்கள் இனங்காணப்பட்டுள்ளன.

தொழிலுக்கு ஏற்ற தகுந்த சம்பள கொடுப்பனவுடன் **இலவச தங்குமிடம், உணவு, காப்புறுதி** மற்றும் ஏனைய பல வசதிகளுடன் தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் வாய்ப்புக்கள் வழங்கப்பட வுள்ளன.

குறிப்பாக தொழிற்பயிற்சிகளை நிறைவு செய்த மற்றும் அனுபவமுள்ள, அனுபவம் இல்லாத(பயிற்சியளித்து) நபர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவீர்கள்.

**தகவல்களை அறிந்து கொள்ள...**
எதிர்வரும் 06.09.2014 சனிக்கிழமை காலை 9 மணி முதல் 1 மணி வரை எமது பிரதான மண்டபத்தில் நடைபெற இருக்கும் எமது கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம், சுப்ரா வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

தொலைபேசி
**0112809903, 0114389579**

இல.10 / 1, ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை,நுகேகொட



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 12<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: B.Com, CIMA, Chartered / வங்கியாளர்<br>தொ.இ: B/1825 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: 47 சூரி செவ் 5 இல்.<br>தகைமை/தொழில்: A/L / கிராம அலுவலர்<br>தொ.இ: G/2687 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 71<br>தகைமை/தொழில்: A/L /அச்சக வேலை<br>தொ.இ: B/1826 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 9 ¾ சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, Draftsman<br>தொ.இ: G/2689 |
| பிறப்பு: 1979 கிறிஸ்தவம் (RC)<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 15 சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: LLB, MA / சட்டத்தரணி, சட்ட விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: B/1835 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 52 செவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L, Dip. in Preschool / முன்பள்ளி ஆசிரியர்<br>தொ.இ: G/2697 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 8 ½ சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L /ரக்ரர் உரிமையாளர்<br>தொ.இ: B/1836 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>கி.பா: 13 ½ சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்<br>தொ.இ: G/2699 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



## AHAVOLI
## Institute for Higher Studies
## Offers the followings courses

**Diploma courses**

*1. Training of Psychological Counselors*
The applications are called for training of Counselors. This is a one year, week-end (Saturday & Sunday) Course that consists of 450 hours.

*2. Peace Building & Community Development Practice*
This is a one year, week-end (Saturday & Sunday) Course that consists of 240 hours.
The applicants should have the following prerequisites to apply for these courses.
1. Knowledge of English as to read, write and speak.
2. pass in Advanced Level.

*3. Interested in social activities.*
N.B:- The Diploma Certificate would be given by the National University of Ireland, Galway

**Certificates Course**

*1. Italian Language*
The classes will be conducted on Tuesdays and Thursdays for six months from 3.30 to 5.30 pm

The applicants will have to buy a special application form our office and submit them before the 10th of September. Only 25 applicants will be selected to follow these training.

For further details please contact:

*'AHAVOLI"*
*Institute for Higher Studies*
*Affiliated to National University, Galway*
*St.Patrick's Road, Jaffna.*
*Contact No 021 222 2856*

(7525)

# சமூக ஒருமைப்பாட்டு வாரத்தை முன்னிட்டு பாண்ட் வாத்திய கருவிகள் வழங்கப்பட்டன

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இவ்வாண்டிற்கான சமூக ஒருமைப்பாட்டு வாரத்தை முன்னிட்டு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் விசேட செயற்றிட்டத்தின் கீழ் புத்தூர் குருநாதர் முன்பள்ளி, ஆவரங்கால் கிழக்கு லிங்கம் முன்பள்ளி ஆகியவற்றின் சிறார்களுக்கு கடந்த வியாழக்கிழமை பாண்ட்வாத்திய இசைக் கருவிகள் வழங்கப்படடன.



கோப்பாய் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் சமூக ஒருமைப்பாட்டு வாரநிகழ்வின் போது யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொண்டு இப்பாண்ட் வாத்தியக் கருவிகளை வழங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-134)

# திவிநெகும வாழ்வாதார நிவாரண கடன் திட்டம்

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதிலும் திவி நெகுமசான அருணு என்னும் வாழ்வாதார நிவாரண கடன் திட்டத்தை எதிர்வரும் முதலாம் திகதிமுதல் அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளது.

இது வறுமைக் கோட்டுக்குட்பட்ட நாடெங்கிலுமுள்ள 30 ஆயிரம் கிராமத்திலுள்ள மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும் என வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட சமுர்த்தி முகாமைளர்களுடான சந்திப்பு ஒன்று நேற்று முன் தினம் ஆளுநர் அலுவலத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும் போது பயனாளிகளுக்கு இப்வெழுச்சித் திட்டம் பற்றி சமுர்த்தி உத்தியோகத்தர்கள் விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும்.

சமுர்த்தி பயனாளிகள் பற்றிய விபரங்களை மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் மூலம் ஆளுநருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அவர்கள் அறியத்தர வேண்டும்.

இக் கடன் திட்டத்துக்கு பின்னர் தேவையில்லை.

அதே மாதிரி ஆவணங்கள் அவசியமில்லை.

பலதடவைகள் அலையத் தேவையில்லை.

ஐயாயிரம் கடனானது ஒரே நாளிலும் ஐம்பதாயிரம் ரூபாவினால் ஆகக் கூடியது மூன்று நாட்களிலும் மக்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

வங்கியொன்றில் பணம் கடனாக அல்லது வீட்டுக்கடன் பெற்றுக் கொள்வதனால் எத்தனை ஆவணங்கள், பிணையாளிகள், அலைச்சல்கள் என எண்ணிப் பார்க்கும் போது சமுர்த்திக் கடன் என்பது எவ்வளவு இலகுவானது என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ

# தேள் விற்பனை

தேள் ஒன்று 10 ஆயிரம் முதல் அதற்கும் மேற்பட்ட தொகைக்கு விற்பனை செய்யும் வியாபாரம் நாட்டில் இடம்பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தேள்களை விற்பனை செய்ய முயற்சித்த மற்றும் அதனை கொள்வனவு செயய முயற்சித்த சிலரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த தகவல் தெரியவந்துள்ளது.

பரிசோதனைகள் மற்றும் செல்லப்பிராணிகளாக வளர்க்க சில நாடுகள் தேள்களை கொள்வனவு செய்வதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக தேள்கள் பிடிக்கப்பட்டு இவ்வாறு விற்பனை செய்யப்படுவதாக கூறப்படுகிறது. இலங்கையில் ஏற்கனவே முதலை பல்லிகள் பிடித்து விற்பனை செய்யும் வியாபாரம் நடைபெற்று வருகிறது. அத்துடன் காட்டில் உள்ள யானைக்குட்டிகள் பிடிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில், தற்போது தேள் விற்பனை சந்தைக்கு வந்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 130 | 120 |
| தக்காளி | 50 | 60 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 50 |
| கோவா | 60 | 80 | 40 | 80 |
| கரட் | 80 | 100 | 90 | 100 |
| பூசணி | 20 | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 110 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 90 | 70 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | 70 | 80 |
| பயற்றங்காய் | 60 | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 50 | 50 |
| கறிமிளகாய் | 80 | 60 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 40 | 50 | 50 | 60 |
| போஞ்சி | 100 | 120 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 60 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 80 | 25 |
| தேசிக்காய் | 120 | 120 | 90 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 30 | 30-35 |
| இராசவள்ளி | 100 | 80 | – | – |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 121



டொறின் மன்மதநாயகம்




சக்தி குமார்




சிவசிதம்பரம் மகிழ்நன் சிவநாசிவ




தனுஷன் மெண்டிஸ்




தீபன் சற்குணம்




கோபல் துவா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

# தமிழீழம்

## இந்திய மத்திய அரசு இதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ்

(கொழும்பு)

ஈழத்தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு அதன் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். மேலும் இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் தமிழர்களுக்கு எந்த அதிகாரமும் வழங்க முடியாது என இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும், அமைச்சருமான பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதுமட்டுமின்றி, ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்பது குறித்து தங்களிடம் இந்தியா இதுவரை எதுவும் கூறவில்லை என்றும், இந்த விடயத்தில் இந்தியா பொறுப்புடன் செயற்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் இலங்கையில் உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் அண்மையில் இந்தியா வந்து பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து பேச்சு நடத்தினர்.

அவர்களின் கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்ந்த பிரதமர், இலங்கையில், தமிழர்கள் சம உரிமை, கண்ணியம் மற்றும் சுயமரியாதையுடன் வாழும வகையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று கூறியிருந்தார்.

இலங்கைப் பிரச்சினைக்கு தமிழீழம் தான் தீர்வு என்ற போதிலும், பிரதமர் நரேந்திர மோடியின் யோசனை செயற்படுத்தப்பட்டால் தமிழர்களுக்கு ஓரளவாவது அதிகாரமும், உரிமையும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.



ஆனால், இந்தியாவின் யோசனையை நிராகரித்ததுடன், இருக்கும் அதிகாரத்தைக் கொண்டு இலங்கை வடக்கு மாநில நிர்வாகம் ஆட்சி செய்யட்டும் என்று இலங்கை அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

இது ஈழத்தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம்- வழங்க மறுப்பது மட்டுமின்றி இந்தியாவை அவமதிக்கும் செயல்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் யோசனையை இலங்கை நிராகரிப்பது இது முதல் முறையல்ல. முந்தைய ஆட்சிக் காலத்தில், இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண 13ஆவது அரசியல் சட்டதிருத்தத்தை செயற்படுத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்திய போதெல்லாம், அதை ஏற்றுக்கொள்வதாக இங்கு கூறிவிட்டு இலங்கை சென்ற பின்னர் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க முடியாது என்று கூறுவதை சிங்கள ஆட்சியாளர்கள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

இனப் பிரச்சினையைப் பொறுத்தவரை ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்கப் போவதாக உலகை நம்பவைத்து நயவஞ்சகமாக ஏமாற்றுவதே இலங்கையின் வழக்கம் என்பது தான் வரலாறு நமக்கு சொல்லும் உண்மை ஆகும்.

எனவே, ஈழத்தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு அதன் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். ராஜபக்ஷ அரசுக்கு காலக்கெடு விதித்து அதற்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்எனவலியுறுத்தவேண்டும்.

அதன்படி இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசு தீர்வு காணவில்லை என்றால், இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களை இணைத்து தனித்தமிழீழம் அமைப்பது குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலமாக உலகம் முழுவதும் வாழும் ஈழத்தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## 20 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் நிலைமைகளை நேரடியாக கண்டறிவதற்காக நியூஸ்பெஸ்ட் குழுத்தினர் சில பிரதேசங்களுக்கான விஜயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, நிலவியுள்ள வரட்சியினால் 14 மாவட்டங்களை சேர்ந்த ஐந்து இலட்சத்து 75 ஆயிரத்து 724 குடும்பங்களைச் சேர்ந்த 20 இலட்சத்து 7 ஆயிரத்து 225 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 18ஆயிரம் 541 குடும்பங்களைச் சேர்ந்த நான்கு இலட்சத்து 12 ஆயிரத்து 451 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரட்சியினால் அம்பாறை மாவட்டத்தில் 31 ஆயிரத்து 278 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு இலட்சத்து 52 ஆயிரத்து 673 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 500 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தில் 53ஆயிரத்து 512 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து 14 ஆயிரத்து 48 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நிலவுகின்ற வரட்சியினால் வட மாகாணத்தில் ஒரு இலட்சத்து ஐயாயிரத்து 955 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 82 ஆயிரத்து 471 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு போதுமான நீரைப் பெற்றுக் கொள்ள முடியாமல் செய்கையாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதுதவிர வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் வரட்சியினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ)

## பேச்சுவார்த்தை தோல்வி

நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களுக்கும், சுகாதார பிரதியமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இந்த நிலையில் வைத்தியசாலைகளில் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நிறைவுகாண் மருத்துவவியல் வல்லுநர்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த பணிப்பகிஷ்கரிப்பிற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

14 நாட்களுக்கு அமுலாகும் வகையில், ஆறு தொழிற் சங்கங்களின் பணிப்பகிஷ்கரிப்பிற்கு நீதவான் சுஜாதா அலகப்பெரும இந்த தடையுத்தரவை பிறப்பித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்ற நோயாளர் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை பரிசீலித்த பின்னரே நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்ற நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே பணிப்பகிஷ்கரிப்பை இடைநிறுத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனையடுத்து 14 நாட்களுக்கு அமுலாகும் வகையில் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளதுடன், செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகு மாறும் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.(இ)

## அரிசி விற்பனை குறித்து அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர் கழகம் யாழ். மாவட்டத்தில் அரிசி விற்பனைக்கு தடையாகவுள்ள விடயங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் மேற்கொள்ளவுள்ள அவசரகலந்துரையாடல்நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். வணிகர் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து வர்த்தக சங்க பிரதிநிதிகளும் அரிசி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களும் பங்குபற்றுமாறு வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (இ)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி உருத்திரசுந்தரம் கண்ணகாதேவி

கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கண்ணகாதேவி உருத்திரசுந்தரம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### சுப்பிரமணியம் இரத்தினவடிவேல்



வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் இரத்தினவடிவேல் கடந்த 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### ஆரோக்கியநாதர் அல்பேட் அலெக்சிஸ்நாதன்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Mantes La Ville ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஆரோக்கியநாதர் அல்பேட் அலெக்சிஸ்நாதன் கடந்த 28 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு 125 Route de Houdan, 78711, Mantes- la-Ville,France என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### கந்தையா அருணாசலம்



எழுவைதீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அருணாசலம் கடந்த 27 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் எழுவைதீவு மயானத்தில்-தகனம் செய்யப்படும்.



### பொன்னுத்துரை செல்வராசா

மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Colombes ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை செல்வராசா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் Crematorium Pere Lachaise Salle Couple, 16 Rue Du Repos-75020 Paris, France என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### திருமதி கதிர்காமு தெய்வானைப்பிள்ளை



கிளிநொச்சி முரசுமோட்டை பழையகமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு தெய்வானைப்பிள்ளை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெறும்.

# இரும்பு குதிரை

## திரைவிமர்சனம்

தமிழ் சினிமாவின் புதிய பரிமாணத்தின் வளர்ச்சி தான் இந்த இரும்பு குதிரை. தன் காதலுக்காக போராடும் இளைஞன். நமக்கு பழக்கப்பட்ட கதை என்றாலும் இதை பைக். ரேஸ் என புதிய கோணத்தில் கொடுத்து அசத்தியிருக்கிறார் யுவ ராஜ் போஸ்.



அதர்வா படித்து முடித்து விட்டு பீட்சா கடையில் டெலிவரி பாயாக வேலை பார்த்து வருகிறார். இவர் பைக் ஓட்டுவதென்றால் ரூல்ஸை கடைப்பிடிக்கிற கரக்டர். ஒருநாள் பஸ்ஸில் போகும்போது பிரியா ஆனந்தை பார்க்கிறார். பார்த்தவுடனயே அவள் அழகில் மயங்கிவிடுகிறார். அவளுடைய போன் நம்பரை கண்டு பிடித்து அவளுடன் பேசத்துடிக்கிறார்.

ஒருகட்டத்தில் பிரியா ஆனந்தின் போன் நம்பரை கண்டுபிடித்து அவளிடம் பேச ஆரம்பிக்கிறார் அதர்வா. அவளும் அதர்வாவுடன் பேசத்தொடங்குகிறாள். இருவரும் நட்பாக பழகிக்கொண்டிருக்கும் போது அதர்வா மனதுக்குள் மட்டும் காதல் துளிர் விடுகிறது.

பிரியா ஆனந்த் நமக்கென்று ஒரு பைக் இருந்தால் எப்படி இருக்கும் என்று அதர்வாவிடம் தனது ஆசையை கூறுகிறார். பிரியா ஆனந்திற்கு விருப்பமான பைக்கை வாங்க முடிவெடுகிறார். ரேஸ் பைக்கான டிகார்டி பைக்கை வாங்க வேண்டும் என்று பிரியா ஆனந்த் அதர்வாவிடம் கூறுகிறாள். அதர்வாவோ அந்த பைக் வேண்டாம் என்று கூறுகிறார். ஆனால், பிடிவாதமாக பிரியா ஆனந்த் அந்த பைக்தான் வாங்கவேண்டும் என்று கூறிவிட்டு சென்றுவிடுகிறார்.

வேறு வழியின்றி அதர்வாவும் அந்த பைக்கை வாங்கிக்கொண்டு பிரியா ஆனந்தை சந்திக்கிறார். அப்போது அவர்மீதுள்ள காதலை சொல்லும் அதர்வாவிடம். நட்பாகத்தான் பழகுகிறேன் என்று சொல்லி அவர்மீது கோபப்படுகிறார்.

இருவரும் அங்கிருந்து திரும்பி வரும்வேளையில் இவர்களை ஜானி மற்றும் அவருடைய ஆட்கள் பிரியா ஆனந்தை கடத்தி சென்று விடுகின்றனர்.

ஜானி. பிரியா ஆனந்தை கடத்திச் செல்ல காரணம் என்ன? பிரியா ஆனந்தை ஜானியிடம் இருந்து அதர்வா மீட்டாரா? என்ன ஆகிறது? என்பது தான் மீதிக்கதை.

மொத்தத்தில் 'இரும்பு குதிரை' முரட்டுத்தனம்

# தொடரும் தலைவலியால் பின்வாங்குமா கத்தி?



கத்தி படத்தை தீபாவளி அன்று காண அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் இப்படத்திற்கு ஏற்கனவே எதிர்ப்புகள் இருக்கும் போது. தற் போது மீண்டும் ஒரு தலைவலி வந்துள்ளது.

இந்த தீபாவளிக்கு கத்தி படத்தை போல் பூஜை படமும் வெளி வரும் என பூஜை போட்ட அனறே விஷால் கூறிவிட்டார்.

ஆனால் விஷால் என்பதால் விஜய்யும் இந்த போட்டியை பெரிதாக எடுத்து கொள்ளவில்லை.

தற்போது ஷங்கரின் ஐ படமும் வருகிறது என்றவுடன் விஜய் தரப்பு கொஞ்சம் சுதாரிக்க தொடங்கியுள்ளது.

ஏனெனில் ஐ படம் தமிழகம் மட்டும் இல்லாமல் வெளி நாடுக ளிலும் நிறைய தியேட்டர்களில் எடுப்பதால் கத்தி படத்தில் தியேட்டர் எண்ணிக்கை குறையும் என்று தெரிகிறது.

# ஆச்சரியத்தில் ஆழ்த்திய அஜித்



அஜித் என்றாலே தன் படங்களில் சண்டைக்காட்சிகளில் டூப் இல்லாமல் நடிப்பார் என்று தெரியும். தற்போது கௌதம் மேனன் இயக்கத்தில் நடித்து வருகிறார்.

இப்படத்தில் கார். பைக் என சண்டைக்காட்சிகளில் பட்டையை கிளப்பியிருக்கிறார். மேலும் இப் படத்தில் 120 அடி உயர பில்டிங்கில் இறங்குவது போல் ஒரு காட்சி உள்ளதாம்.

இதில் டூப் இல்லாமல் அவரே நடித்து படக்குழுவை அதிர்ச்சியில் மற்றும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினாராம்.

# நவம்பரில் வெளியாகும் கமலின் விஸ்வரூபம் 2




உலகநாயகன் கமல் நடிப்பில் இந்திய திரையுலகமே எதிர் பார்த்து கொண்டிருக்கும் படம் விஸ்வரூபம்-2. இப் படத்தை ஒஸ்கர் ரவிச் சந்திரன் தயாரித்துள்ளார்.ஐ படத்தையும் இவரே தயா ரிப்பதால் ஒரே நேரத்தில் இந்த இரண்டு மெகா பட்ஜெட் படங்களை அவரால் ரிலிஸ் செய்ய முடியவில்லை. அதனால் முதலில் ஐ படத்தை தீபாவளி அன்று ரிலிஸ் செய்து விட்டு. 3 வாரத்திற்கு பிறகு நவம்பர் 15 ஆம் திகதி ரிலிஸ் செய்ய முடிவெடுத்துள்ளது.

# பதிலடி கொடுத்த த்ரிஷா



நடித்த சில படங்களிலேயே எல்லோரையும் கவர்ந்தவர் சமந்தா. இவர் இதுவரை நடித்த அனைத்து படங்களிலும் குடும்ப பாங்கான பெண்ணாக தான் நடித்திருந்தார்.திடீரென்று அஞ்சான் படத்தில் பிகினியில் தோன்றி அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார். இதனால் சக நடிகைகள் இவர் மேல் கடுங்கோபத்தில் உள்ளனர்.

இவரே இப்படி நடிக்கும் போது 10 வருடங்களாக தமிழ் சினிமாவில் கொடிகட்டி பறக்கும் த்ரிஷா சும்மா இருப்பாரா? தற்போது இவர் நடித்துக்கொண்டு இருக்கும் கன்னட படத்தில் பிகினியில் தோன்றுகிறாராம்.




# மாதக்கணக்கில் சிரமப்பட வைத்த சமந்தாவின் பளிங்கு மேனி

ஒரு படத்தில் நடிகைகளை அழகாக காட்ட வேண்டும் என்றால் சிஜி என்ற கலர் கரெக்சன் ஒர்க் மூலம் ஒவ்வொருவரின் தோலுக்கேற்ப நிறைய கரெக்சன் செய்வார்கள்.



அந்த வகையில் அஞ்சான் படத்தில் நடித்த சமந்தாவுக்கும் செய்தார்கள்.

ஆனால் சமந்தா வுக்கு ஏற்கனவே தோல் நோய் இருப்பதால் அவர் சம்பந்தப்பட்ட காட்சிகளில் ஓவர் லைட்டிங் கொடுக்காமல் படமாக்கினாராம் சந்தோஷ்சிவன்.

அதனால் அவரது மேனியை பளிங்கு கல் போன்று பளிச்சிட வைப்பதற்காக சிஜி ஒர்க் செய்பவர்கள் மாதக்கணக்கில் சிரமப்பட்டிருக்கிறார்களாம்.

சமந்தாவின் கிளாமருக்காக ஒரு பெரிய தொகையை செலவழித்ததாம் அஞ்சான் தயாரிப்பாளர்.

இந்த விடயம் அறிந்ததும். சமந்தாவை அடுத்தடுத்த படத்தில் கிளாமராக நடிக்க வைக்கலாம் என்று யோசித்த இயக்குனர்கள் எல்லாம் இப்போது பின் வாங்குகிறார்களாம்.


# ரிலிஸிற்கு முன்னரே வசூல் சாதனையில் ஐ



ஷங்கர் இயக்கிய எந்திரன் படமே இதுநாள் வரை கோலிவுட் பாக்ஸ் ஆபிஸில் ம்தலில் இருக்கிறது. இதை முறியடிக்க அவரே ஐ மூலம் களத்தில் இறங்கியுள்ளார்.

இப்படம் உலகம் முழுவதும் 15 ஆயிரம் தியேட்டர்களுக்கு மேல் ரிலிஸ் ஆகிறது. இவை ஒரு ஹாலிவுட் படத்தின் ரிலிஸ்க்கு நிகரானது.

இதை தொடர்ந்து இப்படத்தின் சாட்டிலைட் ரைட்ஸ்ஸும் பல கோடிக்கு வியாபாரம் ஆகியுள்ளது. படம் வெளிவருவதற்கு முன்னே போட்ட பணத்தை எடுத்துவிடலாம் என்று ஒஸ்கர் பிலிம்ஸ் தரப்பு கூறிவருகிறது.




அரசியல், சினிமா
பொழுதுபோக்கு கேள்விகளை
சுருக்கமாக பெயர், முகவரி
குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.




வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

Email
vijasarpathil@gmail.com




## அமைதி பேணப்பட வேண்டிய ஆலயங்களிலும்..

வணக்கம் ஐயா!

**தங்கலீலா, கரவெட்டி**

**மனிதன் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றி முடிக்க முன்னர் இவ்வுலகிலிருந்து சென்று விட்டால் அக்கடமை யாரால் நிரப்பப்படும்?**

**சிறிய கதை**

யமதர்மராஜர் ஒரு மனிதரிடம் வருகிறார். மானிடா இன்று உன் உயிரை எடுக்கப் போகிறேன் என்று கூற. மனிதன் மறுக்கிறான். பார் இன்றைக்கு முதலாவது பெயரே உன் பெயர்தான் என கூறி ஓலையைக் காட்டுகிறான். மனிதன் ஆ... சரி உக்காருங்கள். தேநீர் குடித்துவிட்டு செல்லலாம் என, கூறி யமதர்மராஜனின் தேநீருக்குள் மயக்க மருந்தை கலந்து கொடுக்கிறார். குடித்த யமன் மயங்கி கிடந்த வேளை மனிதன் ஓலையில் முதலாவதாக இருந்த தன் பெயரை அழித்து விட்டு கடைசியாய் எழுதுகிறான்.

மயக்கம் தெளிந்த யமன் மானிடனே உன் உபசரிப்பு எனக்கு மிகவும் பிடித்து விட்டது. அதனால் இன்று கடைசியாக இருக்கும் பெயரில் இருந்து தான் உயிரை எடுக்கப் போகிறேன் என்றான். மனிதனின் கடமைகள் முடிந்த பின்தான் இறைவன் உயிரை எடுப்பான். அது ஆறானாலும் நூறானாலும்.

**Hi G.father,**

**பொ.சாம், பருத்தித்துறை**

**Life இல பிரிவு வந்திட்டுது. இதை Easy யாக எடுத்துக் கொண்டு Life ஐ தொடர்வதற்கு ஒரு குட்டி Tips தாங்களேன்?**

பிரிவு என்பது இல்லாமல் இருந்திருந்தால் உயிரினம் வாழ உலகில் இடம் இருந்திருக்காது. அதே பிரிவை தாங்க முடியாத மனம் படைத்திருந்தால் உயிரினம் பூமியில் நிலைத்திருக்காது.

ஹலோ வியாசகர்!

**ரி.தனுஸ், உருத்திரபுரம்**

**பேஸ்புக் காதல் நிலைக்குமா?**

சகதி என்று தெரிந்தும் அந்த வழியால் தான் செல்வேன் என்று அடம் பிடிப்பவர்களுக்கு அறிவுரை கூறிப் பயனில்லை. அடிபட்டு வரட்டும் என விட்டு விட வேண்டியதுதான்.

அன்பின் வியாசரே!

**சு.ஜெயரூபன், பருத்தித்துறை**

**அமைதி பேணப்பட வேண்டிய ஆலயங்களிலும் நம்மவர்கள் அதிகமாக செல்போன்களைப் பயன்படுத்துகிறார்களே? அது ஏற்றுக் கொள்ளத் தக்கதா?**

என்ன செய்ய. ஆலயம் என்பதற்கு அர்த்தம், விரதம் என்பதன் பொருள் தெரியாதவர்கள் எல்லாம் கோவிலை தம் வீட்டுக் கோடியைப் போல் பாவிக்கிறார்களே?

## பேஸ்புக் காதல் நிலைக்குமா?

அன்பின் வியாசர்

**சி.சுகிர்தமலர், உரும்பிராய்.**

**சுதந்திரம் என்ற அர்த்தத்தில் கருத்துச் சுதந்திரம் உள்ளடங்குமா? உள்ளடங்காதா?**

ஒருவனுக்கு 10 ஆம் நம்பர் சப்பாத்துதான். அளவானது. ஆனால் 9 ஆம் நம்பர் சப்பாத்தை தன் காலில் திணித்து போட்டிருக்கிறான். அதை அவன் தான் செல்ல வேண்டிய இடத்தை அடைந்ததும் கழற்றி விடுகிறான். அப்போது அதை அவன் சுதந்திரமாய் உணர்வான். சுதந்திரம் என்பதற்குள் எல்லாம் அடங்கும்.

அன்புடன் வியாசருக்கு

**லீலா- சிவவடிவேல், இணுவில்**

**தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற திருக்குறளின் கடைசி வரிகள் மனதை நெருடுகின்றதே?**

அதையெல்லாம் இப்போது யாரும் நினைப்பதில்லையம்மா? அண்மையில் ஓர் இளைஞன் தோன்றில் வாளோடு தோன்றுக... என கூறினான். நான் வியந்து போய்விட்டேன். அவன் அடுத்ததாக கூறினான். கல்தோன்றா மண்தோன்றா காலத்து வாளோடு முன்தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி என்று. குழுச் சண்டைக்கு வாளோடு அலைபவன் தன்னை நியாயப்படுத்துகிறான் இப்படி.




CIMA

Chartered Institute of Management Accountants

கல்விக்கான வங்கிக் கடன் வசதி ஒழுங்குசெய்து தரப்படும்

**A/L பரீட்சையை நிறைவு செய்துகொண்டவர்களுக்கு CIMA கற்கைநெறி இலங்கையின் முதல்தரகல்வி நிறுவனத்தில் கொழும்பு விரிவுரையாளர்களுடன் ஆரம்பமாகிறது**

**புதிய பிரிவுகள் ஆரம்பம் -**

WEEK END BATCH - 06.09.2014 (SAT) | WEEK DAY BATCH - 10.09.2014 (WED)

- இலங்கையின் NO. 01 தொழிற்கல்வி கற்கை நிறுவனம்
- 12 வருடகால உன்னத சேவை
- ஒரு வருடத்தில் 5000 இற்கும் மேற்பட்ட கல்வி அனுமதிகள்
- தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் இலங்கையின் முதல்தர நிறுவனம்
- சர்வதேச தரத்திலான விரிவுரை அரங்குகள்
- இங்கிலாந்து CIMA தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டதான கணினி பரீட்சை நிலையம்
- கொழும்பில் இருந்து வருகைதரும் விரிவுரையாளர்கள்
- உலகிலேயே மிகக் குறைந்த வயதுடைய மாணவனை CIMA பட்டதாரி ஆக்கிய பெருமைவாய்ந்த நிறுவனம்
- 09 உலகதர பரிசில்களை வென்றெடுத்த நிறுவனம்
- 108 இலங்கைப் பரிசில்களை தனதாக்கிக் கொண்ட மகத்தான நிறுவனம்
- UK தலைமைக் காரியாலயத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

**வாருங்கள்! இணையுங்கள்! வெல்லுங்கள்!**

# Wisdom Business Academy

(The Specialist in CIMA Education)

No. 154, A/1, Navalar Road, Jaffna.

HELP LINE - 021 222 0727, 021 720 0777

(சி-8366)

# தேசிய பாதுகாப்பு விடயத்தில் ஐ.நா.சபை தலையிடமுடியாது

## சட்டமா அதிபர் திணைக்களம் விளக்கமளிப்பு

இலங்கையின் தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பு தலையீடு செய்ய முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசியல் சாசனத்தை மீறிச் செயற்படக் கூடிய அதிகாரம் எந்தத்தரப்பிற்கும் கிடையாது என சட்டமா அதிபர் நீதிமன்றில் சுட்டிக் காட்டியுள்ளார்.

240 பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவதனை தடுக்குமாறு கோரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுமீதான விசாரணைகளில் பங்கேற்ற போது சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக் டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் இலங்கையின் ஒரு சில பாதுகாப்பு விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனமோ அல்லது வேறு மேற்குலக நாடுகளின் அமைப்புக்களோ அரசியல்சாசனத்தின வரையறைகளை மீறிச் செயற்பட முடியாது என்பதனை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மேன்முறையீட்டு நீதவான் உபாலி அபேரட்ன முன்னிலையில் இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி தீர்ப்பை அறிவிக்க உள்ளதாகவும் நீதவான் தெரிவித்துள்ளார்.

இலங்கை குடிவரவு குடியகல்வு சட்டங்களின் அடிப்படையில் எந்தவொரு வெளிநாட்டுப் பிரஜையும் உரிய கடவுச் சீட்டு மற்றும் விசா இன்றி நாட்டில் தங்கியிருக்க முடியாது என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக் டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவதற்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவினை நீக்குமாறு அவர் கோரியுள்ளார்.

இதேவேளை, மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைகள் பூர்த்தியாகும் வரையில் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படக் கூடாது என புகலிடக் கோரிக்கையாளர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# அரசாங்கம் நாட்டை அழித்து வருகின்றது

அரசாங்கம் நாட்டை அழித்து வருவதாக ஜே.வி.பி. யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நாட்டை சொந்த சொத்தாகவே கருதிச் செயற்படுகின்றது. உலகில், நாட்டின் வளங்களை மிகவும் மோசமாக கொள்ளையிட்ட அரசாங்கமாக இந்த அரசாங்கம் திகழ்கின்றது.

மக்களை அச்சுறுத்தி ஆயுதங்களைப் பயன்படுத்தி அரசாங்கம் தேர்தலை வெற்றி கொள்ள நினைத்தால் ஜே.வி.பி அதற்கு இடமளிக்காது.

பல்வேறு அர்ப்பணிப்புக்களுடன் வளர்க்கப்பட்ட கட்சி எமது கட்சி. எங்களைக் கிள்ளி விடுவதன் மூலம் அச்சுறுத்தி ஒடுக்கி விட முடியாது.

ஊவா மாகாணத்தில் தேர்தல் சட்டங்கள் எதுவும் அமுல்படுத்தப்படவில்லை. தேர்தல ஆணையாளர் தொலைக்காட்சியில் தோன்றி மக்களுக்கு நகைச்சுவை உணர்வை வழங்கி வருகின்றார்.

பொலிஸார் சட்டத்தை அமுல்படுத்தவில்லை எனவும், தேவையென்றால் மக்கள் நீதிமன்றின் உதவியை நாடி தேர்தல் சட்டங்களை அமுல்படுத்திக்கொள்ளுமாறும் தேர்தல் ஆணையாளர் பகிரங்கமாக தெரிவிக்கின்றார்.


ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள் பதவியை துறக்கத் தயாரில்லை. ஏனெனில் அவர்கள் பதவி விலகினால் செய்த ஊழல் மோசடிகள் அம்பலப்பட்டு விடும் என்ற பீதியில் உறைந்துள்ளனர்.

இதனால் என்ன விலை கொடுத்தேனும் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதில் ஆளும் கட்சியினர் தீவிரம் காட்டி வருகின்றனர் என அனுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார். (இ)

# இழுவைப்படகு மீன்பிடிக்கு செப்.15 க்கு முன்னர் தீர்வு

## முதலமைச்சர் தலைமையிலான கூட்டத்தில் முடிவு

வடக்கு மாகாண கடற்பரப்பில் இழுவைப் படகில் மீன் பிடிப்பு தொடர்பாக அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும். இது தொடர்பாக ஆராய்ந்து தீர்மானம்மேற்கொள்ளகுழுஒன்றை அமைத்து தீர்மானம் எடுக்கப்படும் என வடமராட்சி மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண முதலமைச்சர் கடற்றொழில் போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் சந்திப்பின் இறுதியில் தெரிவிக்கப்பட்டது.



வடமராட்சிக் கடலில் இழுவைப் படகுகளில் மீன்பிடி மேற்கொள்ள விதிக்கப்பட்ட தடை தொடர்பாக மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், கடற்றொழில் போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சர் டெனிஸ்வரன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், வே.சிவயோகன், அனந்தி சசிதரன் எம்.கே. சிவாஜிலிங்கம், பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா. ரவீந்திரன், உப தலைவர் சி. பத்மநாதன், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ. சஞ்சீவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அச்சந்திப்பின்போது, வடமராட்சிப் பிரதேசத்தில் இழுவைப் படகுகளில் தொழில் புரிவோர் சிறு கடற்றொழிலுக்கு பாதிப்பில்லாமல் தொழில்களைப் புரிந்து வந்துள்ள நிலையில் அத்தொழிலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதே இழுவைப் படகு கடற்றொழில் மன்னார், புததளம், நீர்கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஆகிய கரையோரப் பிரதேசங்களில் நடைபெற்றுவருகின்றன. ஆனால், அங்கு மட்டும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்தடையால் பாதிக்கப்பட்டுள்ள கடற் றொழிலாளர்கள் தொழில் மேற்கொள்ள அனுமதி தாருங்கள் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இழுவைப் படகு கடற்றொழிலை மேற்கொள்வது தொடர்பாக வடமாகாண கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்கள் 5 பேரும், கடற்றொழில் நீரியியல் வளத் திணைக்கள மாவட்டப் பணிப்பாளர் 5 பேரும் மத்திய மீன்பிடி அமைச்சர் அதிகாரிகளும் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்றைக் காட்டி முடிவு எட்டப்படும் என சந்திப்பின் போது வடக்கு மாகாண கடற்றொழில் போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்தார்.

இம்முடிவுகளை அடுத்த மாதம் 15ஆம் திகதி வரை அமுல்படுத்த வேண்டாம் எனவும் அமைச்சர் டெனிஸ்வரன் மீனவர்களின் பிரதிநிதி களைக் கேட்டுக்கொண்டார். (இ)

# உள்ளக விசாரணைக்குழு குறித்து ஐ.நாவில் விபரிப்பு

(கொழும்பு)

மனித உரிமை விவகாரங்கள் குறித்து விசாரிக்க இலங்கையில் உள்ளக விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஐ.நா. அமர்வில் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க விபரிக்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 27 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அதில் கலந்துகொள்வதற்கு அரசாங்கத் தரப்பு தயாராகி வருகின்றது.

ஜெனீவா மனித உரிமைப் பேரவைக்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமையிலான தூதுக்குழுவே இந்த 27 ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் இருவரும் தூதுக்குழுவில் இடம்பிடிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ரவிநாத் ஆரியசிங்க



செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கூட்டத் தொடர் 26 ஆம் திகதிவரை நடைபெறும். இலங்கை விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம் விசாரணையின் முன்னேற்றங்கள் குறித்து இந்தக் கூட்டத் தொடரில் வாய்மூல அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது.

புதிய மனித உரிமை ஆணையாளர் செயித் அல் ஹுசைன் அல்லது விசாரணைக் குழுவின் சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் சன்ட்ரா பெய்டா வாய்மூல அறிக்கையை சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை இலங்கையின் சார்பில் அமர்வில் கலந்துகொள்ளும் ரவிநாத் ஆரியசிங்க மனித உரிமை அலுவலகத்தின் வாய்மூல அறிக்கைக்கு பதிலளித்து உரையாற்றுவார். அத்துடன் முதல் நாள் அமர்வில் உரையாற்றவுள்ள ஐக்கிய நாடுகளின் புதிய மனித உரிமை ஆணையாளர் தனது உரையில் இலங்கை குறித்து பிரஸ்தாபிப்பார் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை இலங்கையின் சார்பில் உரையாற்றவுள்ள ரவிநாத் ஆரியசிங்க மனித உரிமை விவகாரங்கள் குறித்து விசாரிக்க இலங்கையில் உள்ளக விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு ஆலோசனை வழங்க சர்வதேச நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கவுள்ளார்.

இது இவ்வாறு இருக்க இம்மாதத்துடன் தற்போதைய ஐக்கிய நாடுகள்மனித உரிமை ஆணையாளர்நவிபிள்ளை தனது பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

அவருக்குப் பதிலாக செயித் அல் ஹுசைன் புதிய மனித உரிமை ஆணையாளராக பதவியேற்கவுள்ளார்.

மனித உரிமை அலுவலகத்தின் விசாரணை குழுவானது இலங்கை விவகாரம் தொடர்பில் ஜெனீவாவில் விசாரணை செயற்பாடுகளை நடத்திவருகின்றது. அத்துடன் விசாரணை செயற்பாட்டை வலுப்படுத்தும் நோக்கில் புதிய ஏற்பாடுகளை விசாரணை கட்டமைப்பில் இணைத்துக்கொள்ளவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# தமிழீழமே தீர்வு

இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கு தமிழீழம் மட்டுமே ஒரே தீர்வு என்று சிங்கப்பூரின் சிற்பி என்றழைக்கப்படும் லீ க்வான் யூ வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் சிங்களவர்கள் மட்டுமன்றி, தமிழர்களும் ஆதி காலம் தொடடே வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால் இரு இனத்தவரும் ஒற்றுமையாக வாழும் சூழல் அங்கில்லை. தவிர இலங்கை ஒரே நாடாக இருக்கும் வரை அங்கு அமைதி நிலவாது.

விடுதலைப் புலிகளை ஒழித்தது நாட்டின் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார். அதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கின்றார் என அவர்மேலும்தெரிவித்தார். (இ)

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

51

....உலகம் முழுவதும் பல் வேறு நாடுகளைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களுக்கு இங் கிலாந்து கவுண்டி களில் ஆடுவது என்பது பெருமையான விடயம். கவு ண்டிக்கள் என்பது நம்மூர் மாவட்ட ங்களைப் போன்றது. ஆனால், நம் மூர் மாவட்டங்களுக்கு இடையே கிரிக்கெட் போட்டிகள் நடைபெறு வாதில்லை. கிரிக்கெட் வெள்ளைக் கார்களுக்கு ஸ்வாசம் போன்றது என் பதால் மாவட்ட அளவில் கவுண்டி என்ற பெயரில் கிரிக்கெட் குழுக் களை அமைத்து விளையாடுவரர்கள். டெஸ்ட் போட்டிக்குத் தகுதி பெறக் கூடிய மிகச் சிறந்த போட்டிகள் கவு ண்டி போட்டிகள். ஏதோ தீபாவளிக் கும், பொங்கலுக்கும் விசேட நாட்களு க்கும் மட்டும் ஆடுவது என்றில்லா மல், வருடம் முழுவதும் எல்லா நாட் களும் இந்தக் கவுண்டி போட்டிகள் நடந்து கொண்டே இருக்கும். ஆங் கிலப் பத்திரிகைகளும் கவுண்டிகளு க்கு இடையே நடக்கும் கிரிக்கெட் போட்டிகளுக்கு முக்கியத்துவம் தந்து வெளியிடும். அந்தந்த கவுண்டியைச் சேர்ந்த ரசிகர்கள் மிகுந்த ஆவலுடன் கிரிக்கெட் போட்டிகளைக் காண்பார் கள். இன்னும் சொல்லப் போனால் இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் சில சமயம் கவுண்டிபோட்டிக ளில் சிறந்த விளையா டும் வீரர்களை டெஸ்ட் போட்டிகளுக்குத் தேர்வு செய்யும். ஒவ்வொரு கவுண்டிக்கும் தனித் தனியே கிரிக்கெட் வீரர் கள் உண்டு. இருப்பினும் தங்கள் நாட்டைச் சேர்ந்த வர்களைத் தவிர, வெளி நாட்டு வீரர்களையும் அணி யில் சேர்த்துக் கொள்வார் கள். கபில்தேவ் நார்தாம்

### இரும்புக் கதவுகளை உடைத்த சச்சின்

டன்ஷையர், ரவிசாஸ்திரி க்ளமார்கன், அசாருதீன் டெர்பிஷையர் ஆகிய கவு



ண்டிகளுக்கு விளையாடி இருக்கின் றனர். சமீபத்தில் ஸ்ரீநாத், அனில் கும்ப்ளே, ராகுல் டிராவிட், கங்குலி ஆகி யோரும் கவுண்டிகளுக்காக விளை யாடியுள்ளனர். கவாஸ்கர் ஒரே ஒரு சீசன் 1980 ஆம் ஆண்டு சோமர்சர் கவு ண்டிக்காக ஆடியிருக்கிறார். ஆனால், முழுநேரமும் கவுண்டிக்காக ஆடியவர் ஒருவர் உண்டென்றால் அவர் முன்னாள் விக்கெட் கீப்பர் ஃப்ரூக் இன்ஜினியர்தான். பல ஆண்டு காலம் இவர் இங்கிலாந்திலேயே தங்கி லங்காஷை யருக்காக ஆடியுள்ளார்.

1990 ஆம் ஆண்டு சச்சின் முதல் முறையாக இங்கிலாந்து வந்தபோதே பத்திரிகைகளின் தலைப்புச் செய்தி களில் அடிபடத் துவங்கினான். தனது 17 ஆவது வயதில் ஓல்ட் டிராஃபோர்ட் மைதானத்தில் அவன் அடித்த செஞ் சுரியைப் பத்திரிகைகள் அப்போது பிரமாதப்படுத்தி இருந்தன. ரசிகர்கள் இன்னும் சச்சின் ஆட்டத்தை மறக்க வில்லை. ஆக, ஏதேனும் ஒரு கவுண்டி சச்சினை கண்டிப்பாக அழைக்கும் என எதிர்பார்த்தார்கள். ஆனால், அந்த அழை ப்பு யார்க்ஷையரிடமிருந்து வரும் என யாருமே எதிர்பார்க்கவில்லை. இந்தியாவில் கிரிக்கெட்டிற்கு மும்பை எந்த அளவு முக்கியத்துவம் தருகி றதோ அந்த அளவு இங்கிலாந்தில் யார்க்ஷையர் முக்கியத்துவம் தருகி றது. நூற்றி ஐம்பது ஆண்டுகளைக் கடந்த கவுண்டி என்பதால் இதில் விளையாடுபவர்களுக்கு இது விதிக் கும் கட்டுப்பாடுகள் அதிகம். தனது பாரம்பரியத்தை அவ்வளவு சீக்கிரம் அது விட்டுக்கொடுத்து எதற்கும் ஒத்துக்கொள்ளாது. எனவே, தனது எல்லைக்கு உட்பட்ட பகுதியில் பிற ந்த வெள்ளைககாரர்களைத் தவிர வேறு யாரையும் சேர்த்துக்கொள் வதில்லை என்ற கொள்கையை அது கடைப்பிடித்து வருகிறது. தவிர, இன்னும் சொல்லப்போனால் யார்க் ஷையரில் பிறந்த ஆசியர்களைக் கூட அது சேர்த்துக்கொள்ள மறுத்துவிட் டது. மற்ற கவுண்டிகள் வெளிநாட்டு வீரர்களை அணியில் சேர்த்துக்கொண்டு வெற்றிபெற யார்ஷையர் திறமையான வீரர்கள் இல்லாத நிலையில் 1968 ஆம் ஆண்டிற்குப் பிறகு கவுண்டி சேம்பி யன் கோப்பையை வெல்லவேயில்லை.

கே. ரமேஷ் (தொடரும்)

> சச்சினிடம் அசாத்திய திறமை இருக்கிறது. திறமை இருக்கிறது. காயம் காரணமாக எங்கள் அணியிலிருந்த மெக்டெர்மாட் விலகியபோது அவருக்கு பதிலாக வேறு ஒரு வேகப்பந்து வீச்சாளரைத்தான் சேர்க்க வேண்டும் என பலரும் குரல் கொடுத்தனர். ஆனால், நான்தான் விடாப்பிடியாக சச்சினுக்காக வாதாடினேன். என நம்பிக்கையை வீணடிக்காமல் சச்சின் விளையாடினான். அவனை அணியில் சேர்த்ததற்காக இன்று எல்லோரும் என்னைப் பாராட்டுகின்றனர். என்கிறார் ஜியாஃப் பாய்காட் தனது சுயசரிதையில்!

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 03

...உங்கள் செயல் மையத்தை உங்கள் மூளை யிலிருந்து இதயத்திற்கு அல் லது இருப்புத் தன்மைக்கு நகர்த்திக்கொள்ள முயற்சி செய்யுங்கள். நீங்கள் உங்கள் மூளையை மையமாகக் கொண்டு செயற்பட்டால் மேலும் மேலும் கேள்விகளே தொடர்ந்து கொண் டிருக்கும். கேள்விகளுடன் உங்களால் அறிந்துகொள்ள முடியாது. விழிப்புணர்வுடன் மட்டுமே அறிந்துகொள்ள முடி யும்.

நீங்கள் இதயத்திலிருந்து இயங்கும்பொழுது விழிப்புணர் வும் புரிந்துகொள்ளுதலும் உங்களிடம் நிகழும்; கேள்வி கள் தானாகவே கரையத் தொட ங்கும்; சூரியன் எழும்பும் பொழுது இருள் தானாகவே மறைவதைப் போல, விழிப் புணர்வு உங்களிடம் நிகழும் பொழுது புரிந்துகொள்ளுத லும் தானாகவே நிகழும். கேள்விகளும் கரைந்துவிடும்.


கேள்விகள் எழுவதற்கு முன்னரே நீங்கள் விடயங் களைப் புரிந்துகொள்ளத் தொடங்கிவிடுவீர்கள். கேள்வி களும் கரைந்துவிடும். இதைப் புரிந்துகொள்வதற்கு சற்று கடினமாக இருப்பினும் ஒரு முறை உங்களுக்கு ஒரு அனு பவம் கிடைத்துவிட்டால் நான் விழிப்புணர்வு என்று எதைச் சொல்கிறேன் என்பதை நீங்கள் சரியாகத் தெரிந்து கொண்டுவிடுவீர்கள். கேள்வி கள் மறைந்து எப்பொழுதும் ஒரு புரிந்துகொள்ளுதல் உங்க ளைச் சூழ்ந்துகொண்டிருக்கும்.

இந்த அளவிற்குப் புரிந்து கொள்ளுதல் இருப்பின் மாயை அல்லது பொய்த் தோற்றங் களைப் பற்றி நீங்கள் கவலைப் பட வேண்டாம். என் வார்த்தை களை புத்திசாலித்தனமாகப் புரிந்துகொள்வதுடன் தியா னமும் சுலபமாக இந்த விழிப் புணர்வை அடைய உதவும். நாம் மாயையைப் பற்றியும் பொய்த் தோற்றத்தைப் பற்றியும் மணிக் கணக்காகப் பேசிக்கொண்டிருக் கலாம். அதனால் அதிகக் குழப் பமே மிஞ்சும்.

அதற்குப் பதிலாக அறிவுப் பூர்வமாக வாழும் வழிமுறை களைக் கற்பதே போதுமானது. உங்களுக்கு நான் ஒரு விடயம் சொல்ல விரும்புகிறேன். இந்த மாயை, பொய்த் தோற்றம் எல் லாம் மனதின் பிரதிபலிப்பு களே- அதனால்தான் சொல்கி றேன்- உங்கள் மனதை விட்டு விடுங்கள். அவ்வளவுதான்.

சரி, இப்பொழுது நீங்கள் அனைவரும் இங்கு முழுமை யாக் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்களில் பலர் உடலால் இங்கிருந்தா லும் மனதால் வேறெங்கா யினும் இருப்பீர்கள். நான் சொல்வதெல்லாம் மிகப் பெரும் உண்மைகள். அதனால் நீங்கள் அதைக் கவனமாகக் கேட்டு புத்திசாலித் தனமாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகி றேன். ஆயினும், அனுபவம் பூர்வ மாகப் புரிந்துகொள் ளுதலும் வேறு நிலையில் உங்க ளுள் நிகழும்.

பாருங்கள் நான் முன்பே சொன்னது போல், ஆனந்தப் பரவசம் நம்முள் எப் பொழு தும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. இது அடிப்படை உண்மை. ஆனால், நாம் இந்த ஆனந்தப் பரவசப் பிரவாகத்தைத் தொடர்ந்து தடுத்து நிறுத்திக் கொண்டேயிருக்கிறோம். இதைத் தான் நமது வாழ்க்கையில் துன்ப மாக அனுபவித்துக் கொண்டி ருக்கிறோம். ஆனந்தப் பரவசம் எண்பது வெளியேயிருந்து கிடை த்து உள்ளே எடுத்து வைத்துக் கொள்ளும் ஒரு வஸ்து அல்ல. கண்டிப்பாக அல்ல. அது உங்கள் உள்ளார்ந்த இயல்பு. நீங்கள் இந்த உலகத்திற்கு வரும் பொழுது ஒரு ஆனந்தப் பரவச நிலை யில் இருக்கிறீர்கள். சமூக நெறி ப்படுத்தல்களால் இந்த ஆன ந்த நிலையில் இருந்து வெகு தூரத்திற்கு விலகிச்செல்வதில் வல்லுனராகி பின்னர் உங்களு க்கு வெளியிலிருந்து அதை அடைவதற்கான வழிகளைத் தேடி அலைகிறீர்கள்.



இந்தச் சில நாட் களில் நமக்குள் தொடர்ந்து நிகழ்ந்து கொண் டிருக்கும் இந்த ஆனந்தப் பரவ சத்தைத் தடுத்து நிறுத்து வதைத் தடுப்பது எவ்வாறு என் பதைக் காணப்போகிறோம். ஆனந்தப்பரவசம் என்று நான் சொல்வது, நம் வாழ்க்கையில் தினந்தோறும் அனுப விக்கும் சாதாரண சந்தோஷத்தையல்ல. நம் வாழ்க்கையில் நிகழும் சாதாரண சந்தோஷமானது, வெளியில் நிகழும் ஏதோ ஒன் றின் விளைவு... (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



# சிறுவர் அரங்கம்

907

...என்று கூறிவிட்டு நிறைவான உள்ளத்தோடு சென்றான்.

சின்னஞ்சிறு விடயம் உயர்வையும் அளிக்கிறது. தாழ்வையும் அளிக்கிறது. தராசின் முள்ளும் கொடியவனும் கொண்டான் கோரபன்.

அரசன் இப்போது சிந்திக்கத் தொடங்கினான்.

கோரபன் கூறியபடி நாம் ஒரு போதும் அப்படி வெள்ளரிக்காய் சாப் தந்திலனை அலட்சியப்படுத்தி, வேலை நீக்கம் செய்தது தவறு. அவன் உத்தமன்; கெட்ட செய்கைகள் இல்லாதவன். மேலும், அவன் இல்லாததால் அரசாங்கக் காரியங்கள் எல்லாம் நின்றது.

வலிமைமிக்க நகங்கள் கொண்ட தன்னுடைய வலது கையை உயரே தூக்கியபடி நலந்தானா? ஏன் மனித நடமாட்டம் இல்லாத இந்தக் காட்டில்

# அரண்மனை ஊழியன்!


ஒரே மாதிரியானவர்களே! என்ற பழமொழி மிகவும் சரியே.

மறுநாள் காலை அரண்மனைக்குச் சென்றான் கோரபன்.

அரசன் கட்டில் அருகில் இருந்த குப்பையை வழக்கம்போலப் பெருக்கிக் கொண்டே, அரைத் தூக்கத்தில் இருந்த அரசன் காதில் விழும்படியாக என்ன புதுமை! நம் அரசருக்குத்தான் என்ன பகுத்தறிவு! மலஜலம் கழித்துக் கொண்டே வெள்ளரிக்காயை எவ்வளவு ஆசையோடு தின்கிறார் என்று கூறினான் கோரபன்.

அதைக் கேட்டதும் அரசன் அவசரமாக எழுந்து உட்கார்ந்து கோரபா! என்னையா அவமரியாதையாகப் பேசுகிறாய்? அரண்மனை ஊழியன் என்பதால் உன்னைக் கொல்லாமல் விட்டேன். நீ கூறியதைப் போன்ற காரியத்தை நான் செய்ததை நீ எப்பொழுதாவது பார்த்தது உண்டா....? என்று கோபத்தோடு கேட்டான்.

அரசே! சூதாட்டத்தின் மீதுள்ள ஆசையால் இரவெல்லாம் கண்விழித்து சூது ஆடினேன். அதனால் வேலை செய்து கொண்டிருக்கும்போது தூக்கம் கண்ணைச் சுழற்றியது. தூக்கக் கலக்கத்தில் என்ன உளறினேன் என்று எனக்கே தெரியவில்லை. என்னை மன்னித்துவிடுங்கள் என்று வேண்டிக்



பிட்டது இல்லையே! இந்தமுட்டாள் நடக்காததை நேரில் பார்த்ததுபோல் உளறிக் கொட்டுகிறானே. அன்று தந்திலனைப் பற்றியும் இப்படித்தான் உளறியிருக்கவேண்டும். இது நிச்சயம்.

அப்படி அப்படியே நின்று, சீர்கேடு அடைந்துவிட்டது. அதனால் அரசைப் பற்றிப் பொதுமக்கள் பலவாறு பேசுகின்றனர் என சிந்தனை ஓடியது. அரசன் தன் செயலுக்காக வருந்தினான்.

உடனே தந்திலனை வரவழைத்தான் அரசன். அவனுக்குப் பலபரிசுப் பொருட்களை வழங்கினான். முன்போலவே அவனை வேலையில் இருக்கச் செய்தான். தந்திலனும் நடந்ததை மறந்து வழக்கம் போல அரசு அலுவல்களை மேற்கொண்டான். அதனால் தான் கர்வத்தால் அரசாங்க ஊழியனைச் சரியாக நடத்தாதவன் தந்திலனைப் போல் துன்புறுவான் என்று கூறினேன் என்று தமனகன் கூறி முடித்தது. நண்பனே, நீ சொல்வது சரிதான். அதன்படியே செய்கிறேன் என்றது சஞ்சீவகன்.

பிறகு, சஞ்சீவகனைக் கூட்டிக் கொண்டு பிங்களகனிடம் சென்றது தமனகன்.

சஞ்சீவகன். பிங்களகனை மரியாதையோடு வணங்கி விட்டு அதனெதிரே வசிக்கிறீர்கள்? என்று மரியாதையோடு அதனிடம் விசாரிக்கத் தொடங்கியது பிங்களகன்.

தன் முதலாளி வர்த்தகமானன் வியாபாரத்துக்காகப் புறப்பட்டு வந்ததையும் வழியில் சகதியில் கால் இடறித் தான் விழுந்ததையும். அப்போது தன்னிடம் மிகவும் இரக்கத்துடன் நடந்து கொண்ட, தன் முதலாளியின் கருணை உள்ளத்தையும் வேலையாட்களின் பொய் உரையையும் அதிர்ஷ்ட வசமாகத்தான் குணமடைந்து இந்தக் காட்டுக்கு வந்ததையும் தமனகன் நட்புக் கிடைத்ததையும் பற்றி பிங்களகனிடம் விவரமாகக் கூறியது சஞ்சீவகன்.

நண்பனே! இனி எதற்கும் நீ கவலைப்பட வேண்டாம். என்னுடைய வல்லமையின் பாதுகாப்பில் தங்கி, இங்கே உன் விருப்பம்போல் இரு. என் அருகில் இருந்துகொண்டே உல்லாசமாக நீ விளையாடிக்கொண்டு இருப்பாயாக! இல்லையானால், இந்தக் காட்டில் கொடிய மிருகங்கள் பல உள்ளன. அவற்றால் உனக்குத் துன்பங்கள் நேரிடலாம். ஆனால், இப்போது நீ அதற்காகப் பயப்பட வேண்டாம் என்று கூறியது பிங்களகன்.

தங்கள் கட்டளைப்படி நடந்து கொள்வேன் என்று பதில் அளித்தது சஞ்சீவகன்.

பேசி முடித்ததும் பிங்களகன் யமுனைக் கரைக்குச் சென்று நீராடி நீர் பருகிவிட்டு வழக்கம்போல் சுற்றித் திரிந்தது. இவ்வாறு நாட்கள் சென்றன.

இதற்கிடையில் சஞ்சீவகனுக்கும் பிங்களகனுக்குமிடையே இருந்த அன்பு பெருகி வளர்ந்துகொண்டே போயிற்று.

சஞ்சீவகன் பல நூல்களைப் படித்து அறிவு வளர்ச்சி பெற்றிருந்தது.

(தொடரும்)

## 08.2014 31 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1422 - ஆறாம் ஹென்றி 9 மாத அகவையில் இங்கிலாந்தின் மன்னன் ஆனான்.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் ஜோர்ஜியாவின் அட்லாண்டா நகர் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.
- 1888 - கிழிப்பர் ஜேக்கின் முதலாவது படுகொலை இடம பெற்றது.
- 1897 - தோமஸ் எடிசன் முதலாவது திரைப்படம் காட்டும் கருவியான கினெட்டஸ்கோப்புக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1919 - அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது.
- 1920 - போலந்தில் கமரோவ் என்ற இடத்தில் சோவியத் போல்ஷெவிக்குகளுடன் இடம்பெற்ற போரில் போலந்து வெற்றி பெற்றது.
- 1942 - மேற்கு உக்ரைன், டெர்னோப்பில் என்ற இடத்தில காலை 4:30 மணிக்கு 5,000 யூதர்கள் பெல்செக் என்ற நாசி வதைமுகாமிற்கு அனுப்பப்பட்டனர்.
- 1945 - ஆஸ்திரேலியாவில் லிபரல் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1957 - ஐக்கிய இராச்சியத்திடமிருந்து மலாயா கூட்டமைப்பு விடுதலை பெற்றது.
- 1962 - ஐக்கிய இராச்சியத்திடமிருந்து திரினிடாட் டொபாகோ விடுதலை பெற்றது.
- 1968 - கார்ஃபீல்ட் சோபர்ஸ் கிரிக்கெட் போட்டியொன்றில் ஒரு ஓவரில் 6 ஆறு ஓட்டங்களை எடுத்து சாதனை புரிந்தார்.
- 1978 - இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய புதிய அரசியல் யாப்பு வெளியிடப்பட்டது.
- 1991 - சோவியத் ஒன்றியத்திலிருந்து கிர்கிஸ்தான் வெளியேறி தனிநாடாக அறிவித்தது.
- 1994 - ஐரியக் குடியரசு இராணுவம் போர்நிறுத்தத்தை அறிவித்தது.
- 1997 - வேல்ஸ் இளவரசி டயானா பாரிஸில் கார் விபத்தில் கொல்லப்பட்டார்.
- 1998 - வட கொரியா தனது முதலாவது செய்மதியை ஏவியது.
- 2007 - அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை நடிகர் சரத்குமார் ஆரம்பித்தார்.

### பிறப்புகள்

- 1569 - ஜஹாங்கீர், முகலாயப் பேரரசின் மன்னன் (இ. 1627)
- 1870 - மரியா மாண்ட்டிசோரி, இத்தாலியக் கல்வியாளர் (இ. 1952)
- 1905 - எஸ். ஆறுமுகம், ஈழத்துப் பொறியியலாளர், எழுததாளர் (இ. 2000)
- 1944 - கிளைவ் லொயிட், மேற்கிந்தியத் தீவுகளின் துடுப்பாளர்
- 1979 - யுவன் சங்கர் ராஜா, தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர்

### இறப்புகள்

- 1814 - ஆர்தர் பிலிப், பிரித்தானிய கடற்படை அட்மிரல், காலனித்துவ நிர்வாகி (பி. 1738)
- 1963 - ஜோர்ஜெஸ் பிராக், பிரெஞ்சு ஓவியர் (பி. 1882)
- 1997 - டயானா, வேல்ஸ் இளவரசி (பி. 1961)
- 2001 - ஜி. கே. மூப்பனார் தமிழக காங்கிரஸ் தலைவர் (பி. 1931)

# ஆட்சி மாற்றத்தையே அமெ. விரும்புகின்றது

## இலங்கை அரசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதே அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் தேவையாகவுள்ளது. இதன் தாற்பரியத்தை புரிந்துகொள்ளாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கா ஊடாக தமது தேவைகளை நிறைவேற்ற முயற்சிக்கின்றது என்று அமைச்சரும் முன்னாள் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா தலையிட்டால் அது இங்குள்ள அனைத்து மக்களையும் பாதிக்கும் என்பதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பதவி விலகிச் செல்லும் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை விடயத்தில் பக்கச் சார்பாகவே செயற்பட்டுள்ளார். அமெரிக்கா மற்றும் புலம்பெயர் மக்களின் தேவைக்காகவே அவர் இவ்வாறு செயற்பட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை பதவி விலகிச் செல்கின்றமை மற்றும் கூட்டமைப்பின் இந்திய விஜயம் என்பன குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பதவி விலகிச் செல்லும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை விவகாரத்தில் மிக அதிகளவில் பக்கச்சார்பாக நடந்து கொண்டார். குறிப்பாக அமெரிக்காவினதும் புலம்பெயர் மக்களினதும் தேவையை நிறைவேற்றும் நோக்கில் அவர் செயற்பட்டுள்ளார்.

குறிப்பாக இலங்கை விவகாரம் குறித்து நவநீதம்பிள்ளை வெளியிட்ட அறிக்கையில் இருந்த விடயங்கள் தருஸ்மன் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களாகும். தருஸ்மன் அறிக்கையின் விடயங்களையே நவநீதம்பிள்ளை தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தமை அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

இலங்கை விவகாரம் குறித்த விசாரணை செலவுக்கான நிதி மனிதவுரிமைப் பேரவையின் வரவு செலவுத்திட்டத்தில் இருக்கவில்லை. ஆனால் அந்த நிதியை வழங்குவதாக மேற்கு நாடுகள் உறுதியளித்தன. இதிலிருந்து சில நாடுகளின் தேவைக்கு ஏற்ப இவ் வாறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமை தெளிவாகின்றது.

மேலும் தனக்கு அடங்கிப்போகாத மற்றும் தனது பேச்சைக் கேட்காத நாடுகளின் அரசாங்கங்களை மாற்றியமைப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும். உலகின் சில நாடுகளில் அமெரிக்கா இவ்வாறு செயற்பட்டுள்ளது.

அந்தவகையில் இலங்கையிலும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதே அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் நோக்கமாக வுள்ளது. இந்த தாற்பரியம் புரியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கா ஊடாக தமது தேவைகளை நிறைவேற்ற முயற்சிக்கின்றது. அதனால்தான் கூட்டமைப்பின் செயற்பாடுகளை நாங்கள் எதிர்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஈழத்தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாமையே பேச்சுக்குக்காரணம்

## மோடி- கூட்டமைப்பு-பேச்சு குறித்து அசாத்சாலி கருத்து

(கொழும்பு)

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினால்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினை அழைத்து இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத்சாலி தெரிவித்தார்.



13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை அமுல்படுத்துவது தொடர்பில் பிரதமர் மோடி தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு உறுதியளித்துள்ள நிலையில் அரசாங்கத்தின் ஒப்பந்தகாரராக செயற்பட்டுக் கொண்டிருக்கும் சுப்பிரமணிய சுவாமி 13 ஆவது திருத்தம் 90 வீதம் அமுல்படுத்தப்பட்டதாக கூறியது முற்றிலும் பொய்யானது என்றார். புத்தி சுவாதீனம் இல்லாதவர் சுப்பிரமணிய சுவாமி என்பதும் தெட்டத் தெளிவாகி விட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் அமைப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நடைபெறவுள்ள ஊவா தேர்தலை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் நோக்கில் அரசாங்கம் சர்வாதிகாரமாக செயற்படுகிறது.

ஜனாதிபதியின் அண்ணன் மகன் ரவீந்திர ராஜபக்ஷவை அரசாங்கத்தின் முதன்மை வேட்பாளராக நிறுத்தியுள்ளதோடு தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி அரசாங்கம் அங்கு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கூட சுதந்திரமாக செயற்பட முடியாத நிலையே அங்கு ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி காலத்தில் ரத்தெனிகல போன்ற பல நீர் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

இதுபோன்ற ஒருசில வற்றையேனும் அரசாங்கம் அமைத்திருந் தால் இன்று 15 மாவட்ட மக்கள் தண்ணீர் இன்றி சாகும் நிலை உருவாகியிருக்காது. தோல்வி கண்ட விமான நிலையத்துக்கும் துறைமுகத்திற்கும் செலவழித்த பணத்தை மக்கள் நலன் திட்டங்களுக்கு பயன்படுத்தியிருந்தால் குடிநீர், உணவு பிரச்சினை என்று எதுவும் இங்கு ஏற்பட்டிருக்காது. எது எப்படி இருந்தாலும் ஊவா தேர்தலில் அரசாங்கம் தோல்வியடைவது உறுதி.

இன்று பொதுபல சேனாவுடன் முஸ்லிம்கள், இந்துக்கள் என்று தம்மை கூறிகொண்டு சிலர் எமது சமூகத்தை காட்டிக்கொடுக்கின்றனர். உண்மையில் பொதுபல சேனாவுடன் இணைந்துள்ள எவரும் உண்மையான இந்துவோ முஸ்லிமோ கிடையாது. மாறாக அவர்கள் எமது சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டவர்களே ஆகும்.

மேலும், கொழும்பு மேயர் முஸம்மில், கோட்டாதிபதி அதாவது கோத்தபாய ராஜபக்ஷவின் உறவினராக செயற்படுகிறார் என்று அவரை கோட்டாதிபதி என்று என்னிடம் அமைச்சர் திலங்க சுமதிபால ஒரு நிகழ்வின் போது கூறினார். ஐக்கிய தேசிய கட்சியில் அங்கம் வகித்து கொண்டு கோட்டாதிபதியாக அவர் செயற்படுவாரானால் அது வேதனை தருகின்ற விடயம். முஸ்லிம் மக்களுக்கு துரோகம் இழைக்கின்ற செயல் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வாரம் ஒரு தகவல்

## மூளைக்கு வலிக்குமா?

" இது என்ன... மிகவும் கஷ்டமான சத்திர சிகிச்சையா " வைத்தியர்?

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் தைரியமாக இருங்கள் "

"ஏன் வைத்தியர்! மூளையிலே ஏதாவது ஒரு பகுதி நோய் வந்து பழுதடைந்து போயிருந்தால் அந்தப் பகுதியை மட்டும் வெட்டி எடுத்து விட்டால் சரியாகி விடுமா?"

"சில பகுதிகளை மட்டும் தான் (Non eloquent area) அப்படிச் செய்ய முடியும்! இப்பொழுது உதாரணத்திற்கு நாங்கள் பேசுவதற்கு காரணமான பகுதியினை மூளையிலே இருந்து வெட்டி எடுத்தால் எங்களால் பேசவே முடியாமல் போய் விடும்! ஈரல் செல் மாதிரி மூளை செல் மறுபடியும் உற்பத்தியாகின்ற பகுதி அல்ல!"

" அது சரி வைத்தியர்... உடம்பிலே எந்தப் பகுதியில் சத்திர சிகிச்சை செய்தாலும் வலியை உணர்ந்து கொள்வது மூளை தானே?" அப்படி இருக்கும் பொழுது மூளையிலேயே சத்திர சிகிச்சை என்றால் வலி அதிகமாக இருக் குமோ?

" மூளையிலே உள்ள ஒரு விசேடம் என்ன தெரியுமா? அதற்கு வலியே தெரியாது. மூளையை வெட்டினாலும் கீறினாலும் எந்த வலியும் இருக்காது! மூளைக்கு எந்த நரம்பு இணைப்பும் இல்லை! மூளையிலேயிருந்து மற்றைய பகுதிகளுக்குத்தான் நரம்புகள் செல்கின்றன !"

" அப்படியா?"

"ஆமாம்! ஆனாலும் மூளையின் மேல் தோல் ஓரளவு உணர்வுகள் கொண்டது.சத்திரசிகிச்சை நேரத்திலே மயக்க மருந்து கூட சிறிதுதான் கொடுப்பது வழக்கம். நீங்கள் கொஞ்சம் கூட கவலைப்பட வேண்டாம். இங்கே அதிகளவு வைத்தியர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் என்னுடைய கையாலேயே உங்களுக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்பது எனது ஆசை!"

" மிகவும் நன்றி வைத்தியர்! பிடியுங்கள் உங்களுடைய சத்திர சிகிச்சைக்கான கட்டணம்!"

"நாளைக்குத் தானே சத்திரசிகிச்சை செய்ய வேண்டும்! இன்று ஏன் பணம் கொடுக்கின்றீர்கள்?"

"என் கையாலேயே உங்களுக்கு கட்டணம் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய ஆசை!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மோடியின் எச்சரிக்கை!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம், அரசாங்கத்துக்கு கடும் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கிறது. அரச தரப்பிலிருந்து வெளியிடப்படும் கருத்துக்களிலிருந்து இதனை புரிந்துகொள்ள முடிகிறது.

இலங்கை இராணுவம் நடத்திய பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்க கொழும்பு வந்திருந்த பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சுப்ரமணியன் சுவாமி, இலங்கை அரசாங்கம் அனுமதித்தால் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பார் என்று கூறி, அரசாங்கத்துக்கு உற்சாகத்தை ஊட்டிவிட்டிருந்தார். அந்த அற்ப சந்தோசம் சில நாட்களில் பொசுங்கிப்போனது.

சுப்ரமணியன் சுவாமி இதைக் கூறிய 02 நாட்களில் 06 பேரைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, இரா.சம்பந்தன் தலைமையில் புதுடெல்லி சென்றது.

02 நாட்கள் அங்கு இந்திய அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்கள், அதிகாரிகளுடன் தொடர் சந்திப்புக்களில் பங்கேற்றதானது இலங்கை அரசாங்கத்தின் நாடி நரம்புகளைத் தளரச் செய்துவிட்டது என்றே கூற வேண்டும். சுப்ரமணியன் சுவாமியின் பேச்சை நம்பிய அரசாங்கத்துக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தப் பயணம் முகத்தில் கரி பூசியதுபோல அமைந்துவிட்டது.

சாதாரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புதுடெல்லிக்கு புறப்பட்டுச் சென்றிருந்தால், இந்தளவுக்கு கூனிக்குறுக வேண்டியிருந்திருக்காது.

சுப்ரமணியன் சுவாமி இவ்வாறு கூறியதன் பின்னரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு புதுடெல்லி அழைப்பு விடுத்து, அவர்கள் அங்கு சென்றதுதான் அவமானத்திலும் அவமானம். இது சுப்ரமணியன் சுவாமிக்கு ஏற்பட்ட அவமானம் என்று கூறுவதை விட, அவரை அழைத்து, இத்தகைய கருத்தை வெளியிட வைத்த அரசாங்கத்துக்கு ஏற்பட்ட அவமானம்என்றேகூறவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக புதுடெல்லியின் கதவுகள் திறப்பதற்கு சற்றுக் காலதாமதம் ஏற்பட்டபோதிலும், இலங்கை அரசாங்கத்துக்கு கிடைக்காத பல சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு புதுடெல்லியில் கிடைத்துள்ளன என்பதில் சந்தேகமடைய வேண்டியதில்லை.

கடந்த மே மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டிருந்தார். அப்போது வெறும் 20 நிமிடங்கள் மட்டும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி பேச்சு நடத்தியிருந்தார். அதுவும் மரியாதை நிமிர்த்தமான சந்திப்பாகும். ஏனைய சார்க் தலைவர்களை சந்தித்தது போலவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவர் சந்தித்திருந்தார்.

அதற்கு பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை எந்தவொரு இலங்கை அரசுப் பிரதிநிதியும் சந்திக்கவுமில்லை, பேச்சு நடத்தவுமில்லை.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அணமையில் புதுடெல்லிக்குச் சென்றபோதும, அவரையும் கூட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்திக்கவில்லை.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அதிகாரபூர்வமாக அவர் சந்தித்துப் பேசியுள்ளார். 30 நிமிடங்கள் மட்டும் ஒதுக்கப்பட்ட சந்திப்பு ஒருமணி நேரத்துக்கும் அதிகமாக நீடித்திருக்கிறது. இதன்போது, எல்லா விபரங்களையும் பொறுமையாக கேட்டறிந்துகொண்டிருக்கிறார் நரேந்திரமோடி. இந்திய நாட்டின் பிரதமர் ஒருமணி நேரத்தைச் செலவிட்டு, இலங்கைத் தமிழரின் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்திருக்கிறார் என்பது சாதாரணமான விடயமல்ல.

அதுபோலவே, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவல், வெளிவிவகாரச் செயலர் சுஜாதா சிங் ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன விரிவாக ஆலோசனை நடத்தியுள்ளனர்.

அதிலும், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இலங்கையைச் சேர்ந்த எந்தவொரு தரப்பையும் இதுவரை சந்தித்திராத நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அவர் சந்தித்துப் பேசியுள்ளார்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவியானது மத்திய அமைச்சர் பதவிக்கு நிகரானது. அத்தகைய பதவியை வகிக்கும் அஜித் டோவல், எதிர்வரும் நவம்பர் மாதம்தான், கொழும்பு வரவுள்ளதாகத் தெரிகிறது. இலங்கை அரசுடன் பேசுவதற்கு முன்னதாகவே, அஜித் டோவல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்துள்ளமை முக்கியமானது.

நரேந்திர மோடி அரசாங்கம், இலங்கை அரசுக்கு அளித்துள்ள முக்கியத்துவத்துக்கு ஈடாக அல்லது சற்று அதிகமாகவே கூட்டமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது போலுள்ளது. அதற்காக, இந்திய அரசாங்கம் முற்றிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம் நிற்கிறது என்றோ, இலங்கை அரசுடன் முட்டி மோதப் போகிறது என்றோ அர்த்தமில்லை. அவ்வாறு அர்த்தம் கொள்ள முனைந்தால், அது தவறான விளைவுகளையே தரும்.

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற 03 மாதங்களுக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை அழைத்து விரிவாக பேசுமளவுக்கு இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளதென்பதை உணர்ந்துகொள்ளலாம். அதற்காக மிகையான எதிர்பார்ப்புகளை தமிழர் தரப்பும் வைத்துக்கொள்ளக் கூடாது.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் புதுடெல்லி நடத்தியுள்ள பேச்சுக்கள் இலங்கை அரசாங்கத்தை சினமடையச் செய்துள்ளபோதிலும், அதனையும் கூட பெரியளவில் வெளிப்படுத்த முடியாத நிலையே காணப்படுகிறது. தனது கையை மீறி கூட்டமைப்பு புதுடெல்லி சென்றுவிட்டதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சினந்துகொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால், இந்நிலையை உருவாக்கியது யார் என்பதை அரசாங்கம் மறந்துவிட்டது.

இந்தியாவிடமும் சர்வதேச சமூகத்திடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடியாக பேசி பிரச்சினைகளை முன்வைக்குமளவுக்கு நிலைமையை கொண்டு சென்றது அரசாங்கமே என்று ஐக்கிய தேசியக் கட்சியும்கூட விமர்சித்துள்ளது.

என்றாலும், அரசாங்கத்திலுள்ள கடும்போக்கு கட்சிகளுக்கும் சரி, அதற்கு வெளியேயுள்ள மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) போன்ற கட்சிகளுக்கும் சரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இந்தியா நடத்திய பேச்சுக்களை சகித்துக்கொள்ள முடியவில்லை. அவை வெளிப்படையாகவே எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

அதுமட்டுமன்றி, அரசாங்கத்தின் அனுமதியின்றி இந்தியாவுக்குச் சென்று பேச்சு நடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை பிடித்து சிறையில் அடைக்க வேண்டுமென்றும் குரல்கள் எழுகின்றன.

கூட்டணிக் கட்சிகளின் பேச்சைக் கேட்டு அரசாங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சிறையில் அடைக்க முடிவெடுத்தால், அதைப் போன்றதொரு முட்டாள்தனமான செயல் வேறேதும் இருக்க முடியாது.

1983 ஆம் ஆண்டு தமிழர்கள் மீது ஏவிவிடப்பட்ட இனக்கலவரம் எத்தகைய விளைவை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தியதோ, அதுபோன்றதொரு நிலைமையையே இதுவும் உருவாக்கும்.

இந்தியப் பிரதமரின் அழைப்பின் பேரிலேயே தமிழ்த் தேசியக் கூட்டைமைப்புத் தலைவர்கள் புதுடெல்லி சென்று பேச்சு நடத்தினர். அவ்வாறு சென்றவர்களை கைது செய்தால் அது இந்தியாவை நேரடியாகவே அவமதித்த செயலாக, இந்தியாவுக்கு சவால் விடும் செயலாக அமையும். எனவே, அந்தவொரு தவறை அரசாங்கம் ஒருபோதும் செய்யத் துணியாது.

அதுபோலவே இந்த விவகாரத்துக்காக இந்தியாவுக்கு எதிர்ப்பு வெளியிடப்போவதாக செய்திகள் வெளியானாலும், அதனையும் அரசாங்கம் அவ்வளவு இலகுவாக செய்யாது. ஏனென்றால், அவ்வாறு இந்தியாவின் நகர்வை எதிர்க்க முனைவது இலங்கையை மேலும் சிக்கலுக்குள் மாட்டிவிடும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அணுகுமுறை என்னவென்று இன்னமும் எவராலும் சரியாக ஊகிக்கமுடியாதுள்ளது.



ஏனென்றால், ஆரம்பத்தில் நரேந்திர மோடியின் வருகையை தமிழர் தரப்பு சாதகமாக பார்த்தது.

அவரது பதவியேற்பு விழாவின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் 13 ஆவது திருத்தச்சட்டத்தை வலியுறுத்திய போதும், சாதகத் தன்மையுடன் தமிழர் தரப்பினால் நோக்கப்பட்டது. எனினும், பா.ஜ.கவின் சில தரப்பினர் வெளியிட்ட கருத்துகள் இலங்கை அரசுக்கு சார்பான நிலையை இந்தியா எடுக்குமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்புக்கு பின்னர், தமிழர் தரப்பின் நியாயங்களை இந்தியா புரிந்துகொண்டு செயற்படுவது போன்ற கருத்து காணப்படுகிறது.

எவ்வாறாயினும், இலங்கை விவகாரத்தில் இந்தியா இதுவரை எடுத்துள்ள நகர்வுகள் அனைத்துமே பிரச்சினையை கேட்டறிதல், கண்டறிதல் என்பதாகவே இருந்துள்ளது. அதை தீர்க்குமளவுக்கு களமிறங்க இன்னமும் புதுடெல்லி முனையவில்லை. அத்தகைய கட்டத்திலேயே இந்தியாவினது நிலை என்னவென்பதை தீர்மானிப்பதாக இருக்கும்.

எவ்வாறாயினும், நரேந்திர மோடி, தமிழர் தரப்பின் பிரச்சினையை கேட்டறிவதற்கு கொடுத்துள்ள முக்கியத்துவத்தை சாதாரணமாக எடைபோட முடியாது. இது அவர் தனியே இலங்கை விவகாரத்தை வைத்துக்கொண்டு எடுத்து வைக்கும் நகர்வாக மட்டும் கருத முடியாது. தமிழ்நாட்டில் வலுவாகக் காலூன்றும் அரசியல் இலக்கையும் அவர் மனதில் கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டின் அழுத்தங்களுக்கு அடிபணியும் வெளிவிவகாரக் கொள்கையை இந்தியா கடைப்பிடிக்காதென்று கூறப்பட்டாலும், தமிழ்நாட்டை அரவணைக்கத்தக்க வெளிவிவகாரக் கொள்கையை புதுடெல்லி கடைப்பிடிக்க முனைகிறதா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது.

எவ்வாறாயினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்பட்டுள்ள பேச்சுக்கள் இலங்கை விவகாரத்தில் இந்தியா தனக்குள்ள பொறுப்புகளையும் கடப்பாடுகளையும விட்டுக்கொடுக்கத் தயாரில்லை என்பதையும் உணர்த்தியிருக்கிறது. இது இலங்கை அரசுக்கு வெளியிடப்பட்ட ஒரு மறைமுக எச்சரிக்கையும்கூட.

ஏனென்றால், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும், அதற்கப்பால் சென்று ஓர் அரசியல் தீர்வைக் காண வேண்டுமென்ற இந்தியாவின் நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

இவை இந்தியாவுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் என்பதை புதுடெல்லியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நினைவுபடுத்தியிருந்தாலும், அரசாங்கத்தின் விடாப்பிடிப் போக்கில் தளர்வேதும் ஏற்படவில்லை.

அண்மையில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தியா சென்றிருந்தபோது, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் தனது கொழும்பு பயணத்துக்கு முன்பாக தீர்வுத் திட்டம் தொடர்பான இலங்கை அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டுமென்று தெரிவித்திருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

ஒருவேளை, அரசியல் தீர்வு ஒன்றுக்கான காலக்கெடு ஒன்றை இரகசியமாக இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா கொடுத்திருக்கலாம். அத்தகைய காலக்கெடுவை பயன்படுத்தும் அறிகுறிகள் ஏதும் தென்படாத நிலையில், இலங்கை அரசுக்கு மறைமுக எச்சரிக்கை விடுக்கும் வகையில் கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புதுடெல்லிக்கு அழைத்திருக்கலாம்.

என்னதான் புதுடெல்லியில் பேச்சுக்களை நடத்தினாலும், கடைசியில் தன்னிடம் தானே வரவேண்டுமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியதாகவும் தகவல்கள் உள்ளன. இலங்கை அரசுடன் பேச்சு நடத்தினால்தான் பிரச்சினைக்கு இறுதித் தீர்வொன்று காணமுடியுமென்ற நிலை யதார்த்தமானதே.

என்றாலும், ஓர் இணக்க வழிமுறைக்கு வர மறுக்கும் அரசாங்கத்தை வளைப்பதற்கு வலுவான அரசாங்கங்கள் மாற்று வழிமுறைகளையும் கையாளத் துணியும் என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும். இந்தியாகூட அத்தகைய மாற்று வழி முறைகள் பற்றிச் சிந்திக்கத் துணிந்தால், அது இலங்கை அரசாங்கத்துக்கு ஆபத்தாக அமையும்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரங்களை பகிர்வதற்கு அழைக்கிறது இந்தியா. அப்படியான நிலையில் இலங்கையின் இறைமைக்கோ, ஆள்புல ஒருமைப்பாட்டுக்கோ பாதிப்பு ஏற்படுவதற்கு எந்தவொரு காலத்திலும் இந்தியா அனுமதிக்காது.

எனவே, அரசாங்கம் எந்த அச்சமுமின்றி அதிகாரப்பகிர்வுக்கான முயற்சிகளில் ஈடுபடலாம்.

அதற்கு மாறாக, வலுவான காரணமின்றி அதிகாரப்பகிர்வுக்கு இணங்க அரசாங்கம் மறுக்குமேயானால், இந்தியாவும் மாற்றுவழிகளின் ஊடாக தனது இலக்கை அடைய முயற்சிக்கும்.

அதற்கானதொரு அடையாள எச்சரிக்கையாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இந்தியா கைகுலுக்கிக் கொண்டதைப் பார்க்கவேண்டும். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான பெரும் வரவேற்பு என்று எடுத்துக்கொள்வதை விட, இலங்கை அரசுக்கான எச்சரிக்கையென்று எடுத்துக்கொள்வதே பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

*-கே.சஞ்சயன்-*

# மனித வெடிகுண்டுத் தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தானில் ஆறு பேர் பலி



வெடிகுண்டு தாக்குதலுக்கு 6 பேர் பலியாகினர். நங்கர்ஹர் மாகாணத்தின் ஜலாலாபாத் நகரில் உள்ள தேசிய பாதுகாப்பு படையின் தலைமை அலுவலகத்தின் உள்ளே வெடி பொருட்கள் நிரப்பப்பட்ட வாகனத்துடன் அத்துமீறி நுழைய முயன்ற ஒரு தீவிரவாதியை பாதுகாப்பு படையினர் தடுத்து நிறுத்திய போது, உடலில் கட்டியிருந்த குண்டை அவன் வெடிக்கச் செய்ததில் 6 பேர் பலியாகினர்.

காயமடைந்த 40-க்கும் அதிகமானோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக் கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது. (இ)

# பாகிஸ்தான் இராணுவ மத்தியஸ்தத்துடன் அரசு-போராட்டக்காரர்களிடையே பேச்சு

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலின்போது நடந்த தில்லுமுல்லுகளுக்கு பொறுப்பேற்று பிரதமர் நவாஸ் ஷெரிப் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி தலைவர் இம்ரான்கான், பாகிஸ்தான் அவாமி தெஹ்ரிக் தலைவர் காத்ரி ஆகியோர் தலைமையில் போராட்டம் வலுவடைந்ததால் அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, போராட்டக்காரர்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த அரசு முன்வந்தது.

ஒருபுறம் பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தாலும், நவாஸ் பதவி விலகும்வரை போராட்டத்தை கைவிட மாட்டோம் என்று போராட்டக்காரர்கள் பிடிவாதமாக உள்ளனர். கடந்த புதன்கிழமை நடைபெற்ற 5ஆம் கட்ட பேச்சுவார்த்தையிலும் எந்த முடிவும் எட்டப்படாததால் பேச்சுவார்த்தை நடத்தும் அதிகாரிகளுடனான தொடர்பை போராட்டக்காரர்கள் துண்டித்தனர்.

இருப்பினும், பாராளுமன்ற முற்றுகைப் போராட்டம் தொடர்ந்து நீடித்து வருவதால், போராட்டக்காரர்களுக்கும் அரசுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்து இரு தரப்பினரும் ஏற்றுக்கொளளத்தக்க ஒரு சமரசத் தீர்வினை ஏற்படுத்தும் பொறுப்பினை பாகிஸ்தான் இராணுவம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இதனையடுத்து, பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி தலைவர் இம்ரான் கான், பாகிஸ்தான் அவாமி தெஹ்ரிக் தலைவர் காத்ரி ஆகியோருடன் பாகிஸ்தான் இராணுவத் தளபதி ரஹீல் ஷெரிப் நேற்றுமுன்தினம் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

உள்துறை மந்திரி சவுத்ரி நஸார் முன்னிலையில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையின் விபரங்கள் ஏதும் வெளியாகாத நிலையில், வியத்தகு முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் வேண்டுகோளின்படிதான், இராணுவம் மத்தியஸ்தத்தில் ஈடுபடுவதாக கூறப்பட்டு வரும் நிலையில், இந்த தகவலை பிரதமர் நவாஸ் ஷெரிப் மறுத்துள்ளார்.

'போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமரசம்செய்துவைக்கும்படி நானோ, அரசோ இராணுவத்தளபதியை கேட்டுக்கொள்ள வில்லை என்று நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் நவாஸ் ஷெரிப் குறிப்பிட்டுள்ளார். (இ)

# எபோலாவின் பரவல் அதிகரிப்பு

## ஆயிரத்து 550 பேர் பலி; 3000 பேருக்கு சிகிச்சை

கடந்த பெப்ரவரி மாதம் மேற்கு ஆபிரிக்க நாடான கினியாவில் தென்படத் தொடங்கிய எபோலா என்னும் தொற்றுநோய் அதன் அண்டை நாடுகளான லைபீரியா, சியரா லியோனிலும் கிடுகிடு வெனப் பரவியது. இதுவரை ஆயிரத்து 550 பேரைப் பலிவாங்கியுள்ள இந்த நோயானது கடந்த வாரம் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்துளளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நோயினை எதிர்த்து போராடி வரும் எல்லையில்லா மருத்துவர் அமைப்பிற்கு உள்ளூர் அரசாங்கங்கள் செய்துவரும் உதவிகள் போதுமானதாக இல்லாததால் ஐ.நா. பாதுகாப்புக் கவுன் சிலிடம் உதவி கேட்கும் அளவுக்கு இதன் நிலைமை தீவிரம் அடைந்துள்ளது.

கினியாவின் தென்கிழக்குப் பகுதியில் கடந்த மார்ச் மாதம் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து இதுவரை பலியான உயிர்களின் எண்ணிக்கையைத் தொடர்ந்து இன்னும் 3ஆயிரத்துக்கும மேற்படடோர் இந்த நோய்த்தாக்கத்திற்கான மருத்துவ சிகிச்சையைப பெற்றுவருகின்றனர்.

நைஜீரியாவிலும் பரவிய இந்த நோய்க்கு அங்கு இதுவரை 6 பேர் பலியாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. கடநத செவ்வாய்க்கிழமை அன்று செனேகலின் தலைநகரான டகரின் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 21 வயதுடைய கினியா மாணவனுக்கு எபோலா நோய்த்தாக்கம் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த இளைஞன் தன்னுடைய நாட்டில் எபோலா நோயாளிகளுடன் நெருங்கிய தொடர்பு இருந்ததை மறைத்துள்ளான். குணமடையும் வாய்ப்பு இவனுக்கு அதிகரித்துக் காணப்படும்போதும் சன நெருக்கடி மிகுந்த தலைநகரில் உண்மையை மறைத்து பல வாரங்களாக இவன் தங்கியிருந்துள்ளதால் அவனுடன் தொடர்பு கொண்டிருந்த அனைவரின் விபரங்களையும் சேகரிக்க முயற்சிகள் நடைபெறுவதாக செனேகலின் சுகாதாரத்துறை அமைச்சர் அவா மேரி கொல் செக் தெரிவித்துள்ளார். (இ)




# 8 இலட்சத்து 50 ஆயிரம் பேர் ஒரு மாதத்திற்குள் வெளியேறினர்

ஈராக்கில் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தும் சன்னி பிரிவை சேர்ந்த 'ஐ.எஸ்.ஐ.எஸ்' தீவிரவாதிகளின் கை ஓங்கியுள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதல் அவர்கள் ஈராக் அரசு படையுடன் போரிட தொடங்கினர்.

அதில் இருந்து ஈராக்கின் வடக்கு பகுதியில் பெரும்பாலான நகரங்களை கைப்பற்றினர். குறிப்பாக 2 ஆவது மிகப் பெரிய நகரமான மொசூல் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகள் இவர்களது கட்டுப்பாட்டில் வந்தது.

பின்னர் திக்ரிக், கிர்குக், குர்திஷ்தானில் சிஞ்சார் பகுதிகளை கைப்பற்றினர். அங்கு இஸ்லாமிய தேசம் என்ற புதிய நாடு உருவாக்கியுள்ளனர். அங்கு வாழும் மைனாரிட்டிகளான கிறிஸ்தவர்கள், யாஷிடி பழங்குடி பூர்வீக குடிமக்களை இஸ்லாமிய மதத்துக்கு மாறும்படி கட்டாயப்படுத்தினர்.

மதம் மாற மறுத்தவர்களை கொன்று குவித்தனர்.

எனவே, ஏராளமானவர்கள் மொசூல் உள்ளிட்ட நகரங்களில் இருந்து குடும்பத்துடன் வெளியேறினர்.


கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 8 இலட்சத்து 50 ஆயிரம் பேர் தீவிரவாதிகள் பிடியில் உள்ள நகரங்களில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இந்த தகவலை சர்வதேச புலம் பெயர்வோர், அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

இவர்கள் ஈராக்கில் தன்னாட்சி அதிகாரம் பெற்ற குர்திஷ்தானில் தஞ்சமடைந்துள்ளனர். அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள், மசூதிகள், பள்ளிகள், பூங்காக்கள் கட்டப்பட்டு வரும் கட்டடங்களில் பாதுகாப்பின்றி தங்கியுள்ளனர். (இ)

# தங்கச்சுரங்கம் சரிந்து

## 2 பேர் பலி; 25 பேர் நிலை அறியப்படவில்லை



மத்திய அமெரிக்க நாடான நிகரகுவா தலைநகர் மனகுவாவில் போனான்சா தங்கச் சுரங்கம் உள்ளது. இந்த சுரங்கத்தை கொலம்பியாவைச் சேர்ந்த நிறுவனம் நடத்தி வருகிறது.

தங்கம் வெட்டி எடுக்கும் பணியில் நேற்று முன்தினம் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். திடீரென இந்த சுரங்கத்தின் ஒருபகுதி இடிந்து விழுந்தது. இதில் 2 தொழிலாளர்கள் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

25 பேர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். அவர்களின் கதி என்ன என்று தெரியவில்லை. மீட்புப்பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. இதனை அந்நாட்டு அரசு இணையதளம் உறுதி செய்துள்ளது. (இ)

# உலக நாடுகளுக்குத்தேவை அமெரிக்காவின் தலைமை

## ஜனாதிபதி ஒபாமா பெருமிதம்

முன்னெப்போதும் இல்லாத அளவில் தற்போது அமெரிக்காவின் தலைமை உலக நாடுகளுக்குத் தேவைப்படுகிறது என்றும், தமது நாட்டுக்கு சீனாவோ ரஷ்யாவோ போட்டியாக இல்லை என்றும் அந்நாட்டின் ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் நகரில் நேற்று நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பேசும் போது, உண்மையை கூற வேண்டும் என்றால், உலகில தறபோது ஒழுங்கில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனை நம் மால் கண்கூடாக பார்க்க முடிகிறது. சமூக வலைத் தளங்களும் சில வசதிகளும் இந்த விடயங்கள் குறித்து அவ்வப் போது தெரிந்து கொள்ள உதவுகின்றன.

முன்னெப்போதும இல்லாத அளவில் தற்போது அமெரிக்காவின் தலைமை இந்த உலகிற்கு தேவைப்படுகிறது. நமக்கு சீனாவோ அல்லது ரஷ்யாவோ ஒரு போட்டியே இல்லை. நாம் கொண்டுள்ள கருத்துக்களுக்கும் நமது மதிப்பிற்கும், தற்போது போட்டியாளர்கள் யாரும் இல்லை. சீனாவும் ரஷ்யாவும் நமக்கு இணையானவர்களும் இல்லை.

சீனா முன்னேற்றங்களில முதன்மை பெற்றுள்ளதாக கூறுகின்றனர். ஆனால், என்னால் உங்களிடம் உறுதியாக கூற முடியும். உங்களிடம் சீனா அல்லது அமெரிக்கா என்று இரண்டு தேர்வுகளை தந்தால், நீங்கள் நிச்சயம் தேர்வு செய்யும் ஒன்றாக அமெரிக்கா இருக்கும்.

அதேபோல, ரஷ்யா மிகவும் வளர்ச் சியை கண்டுள்ளதாக கூறுவர். நான் கேட்கிறேன். ரஷ்யாவில் குடியேறுவதற்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனரா? இல்லவே இல்லை!


மக்கள் தற்போது மிகவும் கவலை அடைந்துள்ளனர். இரவு நேர செய்திகள் இதனை அப்படியே பிரதிபலிக்கும். நம் முன் சில அசாதாரண சவால்கள் உள்ளன. அதனை தாண்டி நாம் வாழ்ந்தாக வேண்டும். 50, 60 அல்லது 100 ஆண்டுகளாக இருந்த நிலைமை சில தருணத்தில் மாறும். இந்த மாற்றம் எப்போதும் வேண்டுமானாலும் நடக்கலாம்.

சில பழைய வாக்கியங்கள் தற்போது எடுபடுவதில்லை. ஆனால் புதிய விடயங்களும் பிறக்கவில்லை. நாம் பயணிக்கும் பாதை சவால்கள் கொண்டுள்ளது. அவை கரடுமுரடானவை.

ஐ.எஸ்.ஐ.எஸ்.ஸின் கொடூரங்களை நாம் பார்க்கிறோம். செப்டம்பர் 11 இரட்டை கோபுரத் தாக்குதல் நடத்தி அல்-காய்தா ஏற்படுத்திய அதே மனநிலை இப்போதும் உள்ளது. இவர்கள் நமக்கு இஸ்லாமை உணர்த்த வில்லை. மாறாக, காட்டுமிராண்டித்தனம், தீவிரவாதம் மற்றும் வெறுப்பினை மட்டுமே பிரதிபலிக்கின்றனர்.

இஸ்லாமியர்கள், சன்னி-ஷியா என இரு பிரிவினர்களாக உள்ளதை நாம் பார்க்கிறோம். இதுபோன்ற பிரிவின்ன உள்ள பகுதி களில் வளர்ச்சி இல்லாமல் உள்ளதும் தெரிகிறது. அங்கு இருக்கும் இளைஞர்கள் வளர்ச்சி பாதையில் செல்வதற்கு மாறாக தவறான பாதைகளை பின் தொடர்கின்றனர். எதிர்காலத்தை இழந்தே விட்டனர்.

இவை நமக்கு எதிர்காலம் குறித்த அச்சத்தை ஏற்படுத்துகிறது. ரஷ்யா முன்னெடுத்து செல்ல வேண்டியவைகளை செய்யாமல், பின் நோக்கிய சிந்தனையில் செயற்படுவது வருத்தம் அளிக்கிறது.



அண்டை நாடுகளின் இறையாண் மையை ஒருமைப்பாட்டுக்காக பாடுபட வேண்டிய நாடு, அதற்கு எதிராக செயற்பட கூடாது.

இதனால் பெரிய அளவிலான மக்கள் துயரங்களை சந்தித்து வருகின்றனர். இங்கே தெளிவுபடுத்த விரும்புவது, அமெரிக்காவை காட்டிலும் எந்த ஒரு நாட்டின் ராணுவமும் சிறந்த முறையில் இல்லை என்றார் ஒபாமா. (இ)


# குருந்தூர் மலையில் இராணுவத்தினரின் துணையோடு அரங்கேறும் புதையல் வேட்டை

## தமிழர் வரலாற்றுச் சின்னங்கள் அழிக்கப்படுவதாக மக்கள் குற்றச்சாட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுமாவட்டகுருந்தூர் மலைப்பிரதேசத்தில் தமிழர்களின் வரலாற்றுச் சின்னங்கள் அழிக்கப்பட்டு புதையல் தோண்டும் நடவடிக்கை அரங்கேறுவதாக முல்லைத்தீவு மாவட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் தண்ணீர் முறிப்பு கிராமசேவையாளர் பிரிவில் குருந்தூர் மலைப்பிரதேசம் காணப்படுகின்றது.

பல்லவர் காலத்திற்கு முற்பட்ட தமிழ் சிற்றரசு மன்னர்கள் வாழ்ந்த குருந்தூர் இராசதானி பாரிய தமிழர் பிரதேசத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்களவர், முஸ்லிம்களுடன் ஒரு சில தமிழர்களும் இணைந்து தண்ணீர் முறிப்பு பிரதேசத்திலுள்ள இராணுவத்தின் ஆதரவுடன் இரவு பகல் பாராது கூடாரம் அமைத்து புதையல் தோண்டப்படுவதால் பாதுகாக்கப்படவேண்டிய தமிழ்மக்களுடைய வரலாற்று சின்னங்கள் அழிக்கப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.




முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களில் தமிழர்களுடைய வரலாற்றை பறைசாற்றும் பல வரலாற்று தொல்பொருள் சின்னங்கள் ஆங்காங்கே சிதறிக் காணப்படுகின்றது.

அவை வெயிலிலும் மழையிலும் நாளுக்கு நாள் அழிவடைந்து கொண்டிருக்கின்றன. இத்தொல்பொருள் வரலாற்றுச் சான்றுகளை பாதுகாப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சிங்கள மக்களுடைய மன்னர்களின் வரலாற்று எச்சங்களை பாதுகாப்பதில் உள்ள அக்கறை தமிழர் வரலாற்றுச் சின்னங்களை பாதுகாப்பதில் இருப்பதாக தெரியவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்நிலையில் குருந்தூர் மலைப்பிரதேசத்தில் மன்னர்கால அரண்மனை, குளியல் தடாகங்கள், கருங்கல் கோவில் வழிபாட்டு எச்சங்கள், சந்திரவட்டக்கல் ஆகிய வரலாற்றுச் சின்னங்கள் சிதறிக் காணப்படுகின்றன.

தற்போது குறித்த இடம் காடு, பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதால் எங்கு புதையல் இருக்கும் என்பதைக் கண்டறியாத நிலையில் தொல்பொருள் நிறைந்த பகுதியை சிதைத்து புதையல் தேடுவதால் பாதுகாக்கப்படவேண்டிய தமிழர்களின் சின்னங்கள் அழிக்கப்படுவதை எம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது என மக்கள் கூறுகின்றனர்.

எனவே இராணுவத்தினரின் துணையோடு அரங்கேறும் புதையல் வேட்டையை தடுத்து நிறுத்தி தமிழ் மக்களுடைய வரலாற்று சின்னங்களை பாதுகாக்க முல்லைத்தீவு அரச அதிபர் முன்வரவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-267)

### வயல் விழாவும் விடுதிகள் திறப்பு விழாவும்

நாட்டில் அண்மைக் காலத்தில் நிலவிய கடும் வரட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொழில் நுட்பங்களினால் பாதுகாக்கப்பட்டு பயன் தரும் வயற்பயிர்களை ஒட்டிய வயல் விழாவும் புதிதாக நிர்ணயிக்கப்பட்ட வானிலை அவதானிப்பு நிலையம் நோயியல் ஆய்வு கூடம், புதிய அலுவலர் சுற்றுலா விடுதி மற்றும் மறுசீரமைக்கப்பட்ட விடுதி ஆகியவற்றின் திறப்பு விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி காலை 10 மணிக்கு கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள பிராந்திய விவசாய ஆராய் ச்சி அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறுமென கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய மேல திகப் பணிப்பாளர் கலாநிதி சி.ஜே. அரசகேசரி அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன், விவசாயத்திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி றொஹான் விஜயக்கோன், விவசாய திணைக்கள, நீர்ப்பாசன திணைக்கள கமநல சேவைகள் திணைக்கள சம்பந்தப்பட்ட ஏனைய திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொள்ளவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (2)




சர்வதேச காணாமற்போனோர் தினம் நேற்று காலை வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் தமது உறவுகளை தொலைத்த மூவின மக்களும் கண்ணீர் மல்க கலந்து கொண்டனர். (படங்கள்:–குருமன்காடு செய்தியாளர்)

## "வலியின் வரிகள்" இசைத்தட்டு வெளியீடு




இசைக்கலைஞர் நிமால் இசையமைத்த வலியின் வரிகள் எனும் காணொளி இசைத்தட்டு வெளியீட்டு நிகழ்வு நாளை திங்கட்கிழமை முல்லைத்தீவு செல்வபுரத்தில் நடைபெறவுள்ளது. வன்னி யுத்தத்தில் தனது இரண்டு கால்களை இழந்த நிமால் எழுதி இசையமைத்த பாடல்கள் வலியின்வரிகள்காணொலி இசைத்தட்டாக வெளியாகின்றது.

இந்த நிகழ்வானது வட மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி டாக்டர் சிவமோகன் தலைமையில் நடைபெறும். காணொலியை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் வெளியிட்டு வைக்க முதற் பிரதியை வன்னி மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் சிவசக்தி ஆனந்தன் பெற்றுக்கொள்வார். காணொலியின் விமர்சன உரையை கவிஞர் யோ.புரட்சி நிகழ்த்துவார். இந்நிகழ்வின் போது நிமாலின் இசை நிகழ்வும் இடம்பெறும். (2)

## வீடுகள் வழங்கும் நிகழ்வு

(கிளிநொச்சி)

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கைதடி மேற்கு உதயநகரில் நடைபெறவுள்ளது.

சரஸ்வதி சனசமூக நிலைய தலைவர் லயன் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி சிறிநிதி நந்தசேனன் கலந்து கொள்ளவுள்ளார். குறித்த நிலையத்தின் அங்கத்தவர்களில் வீடற்றவர்களுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்படவுள்ளன. (2-254)

# அம்பாள்குளம் கிராம வீதிகள் திருத்தப்பட்டு மின்விளக்குகள் பொருத்துவது எப்போது?

### மக்கள் கேள்வி

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் 10இற்கும் மேற்பட்ட வீதிகள் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக திருத்தப்பணிகள் எதுவும் நடைபெறாத நிலையில் வீதியின் நடுவில் பெரிய குழிகள் ஏற்பட்டுள்ளது. இதனால் இவ் வீதிகள் ஊடாக பயணிப்போர் பெரும் அவஸ்தைக்குள்ளாகுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கிராமத்தில் 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இக்குடும்பங்களைச் சேர்ந்த அனைவரும் தமது அன்றாட தேவைக்காக இவ்வீதியூடாகவே பயணிக்க வேண்டி யுள்ளது.

இதேவேளை யு.என்.ஹப்பிரட் U.N.Habitat நிறுவனத்தின் 4625917ரூபா நிதியுதவியில் இக் கிராமத்தில் உள்ள ஸ்ரீமுருகன் வீதி, டலக்ஸ் வீதி (2.35 கிலோமீற்றர் நீளம்) ஆகிய இரு வீதிகளின் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதிகள் இரண்டுமே குறித்த நிதியுதவியில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் ஏனைய வீதிகள் குன்றும் குழியுமாக காணப்படுகின்றன.

அத்துடன் திருத்தப்பணிகள் இடம்பெறாத வீதியில் தான் அம்பாள்குளம் விவேகானந்த வித்தியாலயம் அமைந்துள்ளன.

மழைகாலங்களில் இவ்வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பாடசாலை மாணவர்கள் முதல் முதியவர்கள் வரை பல இடர்களை சந்தித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை அம்பாள் குள கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் 2012 ஆம் ஆண்டில் மின்னிணைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு மின்சாரமும் வழங்கப்பட்ட நிலையில் வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு வேளைகளில் வீதிகள் ஊடாக பயணிக்கும் பொதுமக்கள் விபத்துக்களை சந்திப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே குறித்த நிறுவனம் வழங்கிய நிதியுதவியுடன் வீதித்திருத்த வேலைகளை நிறுத்தி விடாது இக்கிராமத்தின் ஏனைய வீதிகளையும் திருத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறையுடன் செயற்பட வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். அத்துடன் வீதிகளுக்கு மின்விளக்குகளை பொருத்தி ஒளியேற்றுமாறும் மக்கள் கோருகின்றனர். (2-271)

## மின்னிணைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை

(பூநகரி)

பூநகரி தெளிகரை கிராமத்தில் இந்தியன் வீடமைப்புத் திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட 50 வீடுகளுக்கு கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மின்னிணைப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பாடசாலை மாணவர்கள் குப்பி விளக்கில் தமது கல்வியைத் தொடரும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தமது எதிர் கால முன்னேற்றம் கருதி மின்சாரத்தை நம்பி மேற்கொள்ளப்படவிருந்த தொழில்கள் முடக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை கொள்கின்றனர்.

குறித்த கிராமம் அடர்ந்த காடுகளையும் பற்றைகளையும் கொண்டு காணப்படுவதால் மழை காலம் அண்மித்துள்ள நிலையில் விசஜந்துக்களின் நடமாட்டம் அதிகமாக காணப்படும் என்பதால் இரவு நேரங்களில் இருள்சூழ்ந்த பகுதியில் தாம் வாழ்வதற்கு அச்சம் கொள்வதாகவும் கூறுகின்றனர்.

எனவே ஏனைய கிராமங்களுக்கு வழங்கப்பட்டது போன்று தமது கிராமத்திற்கு மின்சாரத்தை வழங்கி தமது பிள்ளைகளின் எதிர்கால கல்வியை முன்னேற்றுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர். (2-84)

# கவிதைக் களம்

## கனமழை

வானத்து பிறை நிலவு நோக்கியபோது
அழகிய வெள்ளிக்கூட்டம் நிறைந்தபோது
பளிச்சிடும் அழகிய மென் பிரகாசத்தை
ரசித்திடத் துடித்தன கண்கள்
தும்பிகள் பறந்தன கண்டேன்
புற்றீசல்கள் படையெடுத்து பறந்தன கண்டேன்
கார்மேகம் திரண்டது கண்டேன்
பிறைநிலவும் பகல்காணா வெள்ளியும்
மறைந்தே போயின
கனமழை பொழிந்தது மண்ணில்
நிலமெல்லாம் குளிர்ந்தது கண்டேன்
வற்றிய குளங்களும் நிறைந்தது
வாடிய மரங்களும் செழித்தது
ஓடிய விலங்குகள் ஆடினபாடின
பறவைகள் பறந்தே திரிந்தன
எட்டுத்திக்கும் இனிய குரல்கள்
எதிரொலித்தபடி இருக்க
இத்தனை காலம் இல்லாத மழை
இன்றென்ன எண்ணி வந்ததோ?
நன் மாந்தர்கள் தோன்றியிருப்பரோ
தேறிய மனம் கூறியது கேட்டேன்
அதுமட்டும் நிஜமல்ல நிஜமுமாகா...
அறிவிழந்து அலைந்தவரெல்லாம்
நிஜமுணர்ந்து நீருக்கலைந்தனர்
நீர்வற்றிய கண்களும் கண்ணீர்
சிந்தி நிலத்தை தொட்டதால்
மனம் குளிர்ந்தே கொட்டியது மழை

**பு.பிரசாந், அல்லைப்பிட்டி**

## அவள் அம்மாவுக்காக

நான் மீண்டும் இப்போது
பள்ளிக்குப் போகின்றேன்
முன்பெல்லாம் மழை பெய்கிறபோது
குடைபிடித்து என்கரம் பற்றி
பள்ளிக்கு அழைத்து செல்லுவீர்கள்
இப்போதெல்லாம் தனித்துதான்
பள்ளிக்கு போறனான்
சப்பாத்து கூட கிழிந்து போயிற்று
அம்மா...
இப்போதெல்லாம்
எங்கட வீட்டுப் படலையை
அடிக்கடி பார்ப்பன்...
கடைசியாக
உங்கள் மஞ்சள் நிற சட்டையுடன்
வட்டுவாகலில் பார்த்த ஞாபகம்
அம்மா...

**ஆ.முல்லைதிவ்யன்**

## விரும்பாவிட்டால்

தெரியாத உன்னை
பிடித்துக் கொண்டது
என்- பேதை மனம்
புரியாமல் தட்டிவிடுகிறது
உன் பூவான மனம்
பார்வையாலே
பேச மறுக்கிறது
உன் மான் விழிகள்
கண்டுகொண்ட பின்
நெஞ்சத்தில் நீ
நின்று கொண்டாய்
உன்னாலே எனக்குள்
உருவாகும் ஆசைகள்
ஐஸ்கிறீமாக
உருகி ஓடுதடி
தேன் ஊறும்
உதட்டாலே
நீ- இனிப்பாக
பேசாவிட்டால்
உன்னைச் சுற்றி பறக்கும்
என் மனம்...
நடுவானில்
வெடித்துவிடுமடி

**வீ.அருள்ராஜன்**
**வவுனிக்குளம்**

## இமயம் தொட...

இயற்கைக்கும் உனக்குமான
உறவை உறுதி செய்
மழைவேண்டி
பூஜை செய்வதை நிறுத்தி
மரம் வளர்க்கப் பாடுபடு
கருணை என்பதை
இயற்கையிடத்தும் காட்டு
வெட்டு, வெட்டிய இடத்தில்
இன்னொன்றை நாட்டு

**மாவை.நா. கஜேந்திரன்**

## மனக்குமுறல்

அன்பின் இலக்கணமே
தாய்மையின் இலட்சினையே
பேச்சில் சிறந்தவளே
என் பாசமிகு தாயே
என்னை விட்டு சென்றாயே
ஏங்குதம்மா என் மனம்- இங்கு
வந்திடுவாய் விரைந்தோடி
தேற்றிடுவாய் என் இதயம் தனை
கதைகள் பல கூறினாய்
கருத்தாய் சில பாடல் பாடினாய்
நகைச்சுவை பல செய்தாய்
இவற்றிலும் பல புத்திமதி கூறினாய்
சோறு தினம் ஊட்டினாய் எம் பசி தீர்க்கவே
உம் பசி தீர்க்கவே ஏங்குதம்மா என் மனம்

**தே.லக்ஸ்மன், இளவாலை**

# மௌனத்தின் தேடல் - 218



## பயம்

யாரது எம் கடலதில்
கால் பதித்ததென
யாரோ கேட்கிறான்
உயிர் பயத்தில் ஓடிவந்த
குஞ்சுகளை
மீண்டும் கழுகிடம் ஒப்படைக்க
பேச்சு நடத்துறார்
என் செய்வோம்

**சே.உஷாந்தன்**
**நாவாந்துறை**

## ஊர் எது?

நாடிழந்து நகரிழந்து
ஊரிழந்து உறவிழந்து
நடுக்கடலில் நாதியற்று
நகர்கிறோம்
யார் வருவார் எமை
கரைசேர்த்திட

*ர.பிரசாந்தினி*
*நாவாந்துறை*

## நிர்க்கதி

அவலங்கள் தாங்கி
நிர்க்கதியாய்
தத்தளிக்கிறோம் இறைவா
கண்ணீரிலும்
தண்ணீரிலும் தானா
எங்கள் வாழ்வு
கண்திறவாயோ நீ...?

உதயரூபன், நயினை

## தேடல்

இடரின்போது
இடம்பெயர்ந்து பின்
குடியிருந்த வீட்டிற்கு
திரும்பிவந்த போது
குந்தியிருப்பதற்கிங்கு
குடிசை கூடயில்லை
நிழலுடன் நிற்காமல்
கனிகள் தந்த மரங்கள்
நின்ற இடமும் தெரியவில்லை
கிழிந்த குடைதான்
உதவி புரிகின்றது
சிந்தும் கண்ணீருக்கும்
சிறிதும் குறைவில்லை
வறிய குசேலருக்கன்று
கண்ணபிரான் போல்
இன்று அவருக்கு யாரை
தெய்வம் அனுப்பிவைக்கும்

*க.நாகராசா*
*சாவகச்சேரி*

## நட்பின் பிரிவு

வெறுங்காற்றில்
கரம் நீட்டினேன்- உன்
கையோடு கைசேரத்தான்- ஆனால்
உன் உறவும் இல்லை
என் நிழலும் இல்லை
நான் சாம்பலானாலும்
என் நட்பு வாழும் காலம் தாண்டி

*இ.தர்ஷிகா*
*பண்டத்தரிப்பு*

## போரின் வடு

உயிர்கள் இழந்து
உடைமைகள் இழந்து
உற்றார் உறவினர் இழந்து
எமது தேசத்தைவிட்டு
தமிழன் என்னும்
நாமத்துடன்
தலைநிமிர்ந்து
வாழச்செல்கின்றோம்
கருணை காட்டும் தெய்வமே
கரைசேரச் செல்வது
எம் படகல்ல
எம் வாழ்க்கையும் தான்

க.கபில்ஸ்ரன்

## வேண்டுதல் பலிக்குமா?

போர் விட்ட எச்சங்களே...
அகதி வாழ்வு
இம்மண்ணின்
மச்சங்களாக
மாறாத சோகம் தந்து...
மகத்தான வாழ்வோ?
கூடாரம் அடியிலும்
குடை நிழலும்
குறுகிய வரலாறு
குடும்பத் தலைவன்
அழுதும் தொழுதும்
ஆண்டவரை
வேண்டினாலும் மாறுமா?

*அராலியூர்*
*சோ.சிவகுமாரன்*

## மௌனம்

உலக நாடுகளின்
அமைதி..!
மீண்டுமொரு
முள்ளிவாய்க்கால்
காஸாவில்...!
மரணித்துப்போன
மனிதநேயத்தின்
மத்தியில்- மரணத்துடன்
போராடும் மக்கள்...!

இராசி, தாவடி

## கருணை

பசித்தவர்க்கு உணவளிக்கும்
பணக்கார பெருமக்களே!
எம் பிள்ளைகள் பசிதீர்க்க
உம் கைகளால் தவறி விழும்
சில்லறைகள் போதுமானது

**வி.சுவேதா**
**மன்னார்**

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -219




**அன்பு வாசகர்களே !**


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 03.09.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -





வரலாற்று சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றபோது.
(படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

நிழல்கள்





கனடா வாழ் காரைநகர் கலாசார மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட லயன்ஸ் சர்வதேச மாநாடு அண்மையில் கனடாவில் இடம்பெற்றது. இதன்போது தொழிலதிபர் கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினத்திற்கு அவரது சேவைகளைப் பாராட்டி கேடயம் வழங்கி கௌரவித்தபோது.

நிழல்கள்








கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய சுப்பிரமணியம் மாலதி ஆரம்ப சுகாதார பராமரிப்பு முன்பள்ளி நிலையம் முன்பள்ளி மாணவர்களது மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வி.ஞானகாந்தன் மங்கள விளக்கேற்றுவதையும் விநோத உடையில் பங்குபற்றிய மாணவர்களையும் படங்களில் காணலாம்.

நிழல்கள்







வல்வெட்டித்துறை ஆதிசக்தி முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சிறார்களின் ஒலிம்பிக் தீப நிகழ்வு இடம்பெறுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வல்வை மாநகராட்சி மன்ற செயலாளர் திருமதி.கிருஜா வாசுதேவன் உரையாற்றுவதையும் சிறார்களின் இடைவேளை உடற்பயிற்சி நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

நிழல்கள்

# வேலைவாய்ப்பு

**யாழ். மற்றும் கிளிநொச்சிக் கிளைகள்!**

காப்புறுதியின் முன்னோடியாகிய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் தனது 53 ஆவது ஆண்டு நிறைவில் துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து காப்புறுதி ஆலோசகரிற்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

- நீங்கள் அரசாங்க நிதித் துறையில் பணிபுரிய ஆர்வமுள்ளவரா?
- உங்கள் சமூகத்தில் சிறந்த நிதி ஆலோசகராக செயற்பட விரும்புகிறீர்களா?
- பகுதிநேர வேலைவாய்ப்பினைத் தேடி நிற்பவரா?
- துடிப்பும் ஆர்வமும் உள்ளவரா?
- 18 வயதினைக் கடந்தவரா?
- குறுகிய காலத்திலேயே அதிக வருவாயை உழைப்பதில் ஆர்வமுள்ளவரா?
- ஒரு குழுவுடன் இணைந்து செயற்படுவதில் ஆர்வமுள்ளவரா?
- சிறந்த தொடர்பாடல் திறன் உடையவரா?
- ஓய்வூதியரா?

இன்றே காப்புறுதியின் முன்னோடியும் அரச நிறுவனமுமான எம்முடன் இணையுங்கள்!

***தகைமை***

G.C.E. O/L 6 பாடங்களில் சித்தி கணிதம், தமிழ் அடங்கலாக.

நீங்கள் எம்முடன் இணைந்தால்....

- அரச காப்புறுதியில் இணைவதன் மூலம் காப்புறுதி உலகில் ஓர் அங்கீகாரம்
- வெளிநாட்டுச் சுற்றுலா
- ஆரோக்கியமான போட்டிகளும் அதற்கேற்ற பரிசில்களும்
- இலங்கையின் மாபெரும் நட்சத்திர விடுதிகளில் பயிற்சிகள் மற்றும் விருந்துபசாரங்கள்
- வாகன கடனுதவி
- போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு வருடாந்த கௌரவிப்புகள்
- தகைமை காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு Bank Assurance, சந்தைப்படுத்தல் அதிகாரி போன்ற நிரந்தர வேலைவாய்ப்பு மற்றும் EPF,ETF, வைத்தியசாலைக் கொடுப்பனவுகள்

**காப்புறுதியில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட மேலதிக சலுகைகள்**

இவற்றில் ஆர்வமுள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 15.09.2014 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(7523)

**விற்பனை முகாமையாளர்**
**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**
**இல. 571, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ்**
**தந்தையும் தாயும் போன்று**

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:**
**021 321 0815,021 567 1532**



**HARVARD**
GLOBAL CENTRE



## Courses specially designed for KIDS and Students After A/L

| Course Name | Batch No: | Start Date | Course Fees |
|---|---|---|---|
| Microsoft Office Level 1 | 2 | 4-Sep-2014 | 3500 |
| Microsoft Office Level 2 | 2 | 4-Sep-2014 | 4900 |
| International Computer Driving License (ICDL) | 1 | 8-Sep-2014 | 7990 |
| Kids Computing – 3 Stages | 1 | 8-Sep-2014 | 2900 for each stage |
| Spoken English | 1 | 11-Sep-2014 | 7990 |
| Web Development | 1 | 13-Sep-2014 | 14900 |
| Graphic Designing | 1 | 13-Sep-2014 | 9990 |
| C & C++ | 1 | 11-Sep-2014 | 9990 |
| ASP .NET | 1 | 11-Sep-2014 | 14900 |

**25% Discount for 1st 25 Registrations**

REGISTER NOW!!!

**COME JOIN US & GET RECOGNIZED**

HARVARD GLOBAL CENTRE


No:19/1 , Colombuthurai Road, Chundikuli, Jaffna

Tel No: 021 2217367

(7538)

INTENSIVE TRAINING TOWARDS EXTENSIVE ACHIEVEMENTS

# மரண அறிவித்தல்



**வல்வெட்டித்துறையைச் சேர்ந்த**

## சுப்பிரமணியம் இரத்தின வடிவேல்

26.08.2014 அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் காமாட்சி சுந்தரம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரன் ஆவார். இவர் புனிதவதியம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி - நீலாயதாட்சியம்மா தம்பதியினரின் மருமகனும் ஆவார்.அன்னார் ஸ்ரீதாதேவி, சோதிசிவம், உமாதேவி (ஜேர்மனி), விமலாதேவி, ஜெயதேவி (கனடா), மேகலா ஆகியோரின் தந்தையுமாவார். இவர் தங்கேஸ்வரி அம்மா, தங்கவடிவேல் (இளைப்பாறிய தபாலதிபர்), இராஜேஸ்வரி அம்மா(அமரர்), இராஜவடிவேல்(அமரர்), பழனிவடிவேல்(இளைப்பாறிய ஆசிரியர் -அமரர்), புவனேஸ்வரியம்மா, வெற்றிவடிவேல்(ஆசிரியர்)சக்தி வடிவேல் (இளைப்பாறிய ஆசிரியர்- அவுஸ்ரேலியா)சாந்தகுணவடிவேல்(இளைப்பாறிய பொறியியலாளர் C.T.B) ஆகியோரின் சகோதரரும் ஆவார்

அத்துடன் தெட்சணாமூர்த்தி, சூர்யமூர்த்தி(அமரர்), சிவமூர்த்தி, நீலாய மூர்த்தி (அமரர்), பூலோகராஜா, தேவலோகம்(அமரர்),கலைவானி(அமரர்), வள்ளி நாயகி (அமரர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.இவர் புலேந்திர ராஜா(அமரர்) கதிரவேற் பிள்ளை(பாஸ்கர்), நவபாலன், சந்திரமோகன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.மேலும் யோகராணி, இராஜேஸ்வரி, அசோக்ராஜ்(அமரர்) திருக்கரன், திருக்குமரன், திருப்பரன், குகன், ஆகாஸ் ஆகியோரின் பேரனும் ஆவார். அத்துடன் குயின் ரொக்ஸி, செந்தில்குமரன், ஐஸ்வரியா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் வல்வெட்டித்துறை பழைய சோடாக்கடை ஒழுங்கையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று அவரது பூதவுடல் 31.08.2014 ஞாயிறு மாலை 3 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக ஊறனி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்**

**பழைய சோடாக்கடைஒழுங்கை,**
**வல்வெட்டித்துறை**

**மருமகன் கதிரவேற்பிள்ளை (பாஸ்கர்)**
**T.P.No:- 078 973 3813**

(7539)

# துவிச்சக்கரவண்டியை திருடிய சிறுவனுக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

துவிச்சக்கரவண்டியை திருடியவர் அதை விற்க செல்லும் போது மாட்டிக் கொண்ட சம்பவம் பொலிகண்டிப்பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும்தெரியவருவதாவது. கடந்த 27 ஆம் திகதி பொலிகண்டியை சேர்ந்த பெண்ணொருவர் பொலிகண்டியில் இருந்து நெல்லியடிக்கு வந்து தனது துவிச்சக்கரவண்டியை நெல்லயடி பேருந்து நில்லயத்தின் அருகில் நிறுத்தி விட்டு யாழ்ப்பாணம் சென்றுள்ளார்.


மாலை நேரம் நெல்லியடிக்கு திரும்பிய பெண் தனது துவிச்சக்கரவண்டி திருட்டு போயுள்ளதை அறிந்துள்ளார்.

இதேவேளை மறுநாள் 28 ஆம் திகதி மேற்படி துவிச்சக்கர வண்டியை திருடிய சிறுவன் ஒருவன் துவிச்சக்கரவண்டியை விற்பதற்காக அப்பெண்ணின் கிராமத்திற்கே சென்றுள்ளான்.

இதனையடுத்து அப் பெண்ணின் உறவினர்களால் சிறுவன் பிடிக்கப்பட்டு நெல்லியடி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டான். இதனையடுத்து நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நெல்லியடிப் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

இதன்போது எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சிறுவன் அண்மையில் வேறொரு திருட்டுச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டு சீர்திருத்த பள்ளியில் இருந்தவன் எனவும் தெரிவருகின்றது. (இ-60)




நன்றி:-மிரர்

# இருபது வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் வீதி

(நல்லூர்)

யாழ்.ஆவரங்கால் சிவன் வீதி கடந்த 20 வருடங்களாக திருத்தப்படவில்லை என அப்பிரதேச மக்களால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ஆவரங்கால் நடராஜ இராலிங்க வித்தியாசாலைக்கு செல்லும் பிரதான வீதியாக காணப்படுகின்றது.

குன்றும் குழியுமாக காணப்படுகின்ற குறித்த வீதி மழை காலங்களில் வெள்ளம் நிரம்பி காணப்படுகின்றது.

மேற்குறித்தபாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் மழை காலங்களில் இப்பாதை ஊடாக செல்லமுடியாத காரணத்தால் மாணவர்கள் வேறு பாதைகள் ஊடாக நீண்ட தூரம் பயணம்செய்துபாடசாலைக்குசெல்ல வேண்டியுள்ளது.

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட குறித்த வீதி கவனிப்பாரின்றி காணப்படுகின்றது.

இது தொடர்பாக பல தடவைகள் உரிய அரசாங்க அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரையும் வீதிப் புனரமைப்பிற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அப்பிரதேச மக்களால் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த வீதியினை மழைகாலத்திற்கு முன்னர் சீரான முறையில் தாரிட்டு புனரமைத்து தருமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-134)




# வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுப்பு

(நல்லூர்)

யாழ்.வலிகாமம் கிழக்கு பிரதேச சபை நிர்வாகப் பகுதியிலுள்ள சங்கணாவத்தை வீதி கடந்த 17 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியானது நீண்ட காலமாக குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மழை காலங்களில் வெள்ளம் தேங்கிக் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வீதியானது பருத்தித்துறை பிரதான வீதிக்கு செல்லும் வீதியாகக் காணப்படுகின்றது.

எனவே குறித்த வீதியினை மக்கள்பாவனைக்கு ஏற்றவகையில் புனரமைத்து தருமாறு அப்பிரதேச மக்கள் கோப்பாய்பிரதேசசபைக்குவேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-134)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற நபருக்கு 1 இலட்சத்து 92 ஆயிரத்து 505 ரூபா தண்டம்

(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் சட்டவிரோதமாக மின் சாரம் பெற்றதாக குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு ஒரு இலட்சத்து 72 ஆயிரத்து 505 ரூபா இலங்கை மின்சார சபைக்கு அபராதமாகவும் 20 ஆயிரம் ரூபா குற்றப்பணமாகவும் செலுத்தும்படி பருத்தித்துறை நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேவராணி அல்வாய் பகுதியை சேர்ந்த நபர் ஒருவருக்கே இவ் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் சட்டவிரோதமாக மின்சார பாவனையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளார்.

இது தொடர்பாக பருத்தித்துறை மின்சார சபைக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைத்ததையடுத்து மின்சார சபையினர் நெல்லியடிப் பொலிஸாரின் உதவியுடன் கடந்த ஒரு கிழமைக்கு முன்னர் குறித்த பகுதிக்கு சென்றுள்ளனர்.

இதேவேளை பிரஸ்தாப நபர் மின்சார சபையினரிடம் அகப்பட்டதுடன் அந்நபருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கலும் பதிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் அந்நபர் ஆஜராகி இருந்த போது குற்றத்தையும் ஒப்புக் கொண்டுள்ளார். இதற்கமையவே மேற்குறித்த அப ராதம் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

# நான்கு கைக்குண்டுகள் மீட்பு

(கரணவாய்)

யாழ். பளை ஆதார வைத்திய சாலைக்குப் பின்பகுதியிலுள்ள தனியாருக்கு சொந்தமான காணியொன்றிலிருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் ஆகாஸ் வகை கைக்குண்டொன்றும் இனம் காணப்பாடத மேலும் மூன்று குண்டுகளையும் மீட்டுள்ளதாக பளை பொலிஸார் நேற்று சனிக்கிழமை தெரிவித்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்திலுள்ள காணி உரிமையாளர் துப்புரவு செய்து கொண்டிருந்த போதே குண்டுகள் இருப்பதை அவதானித்து பளை பொலிஸ் நிலையத்திற்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் இராணுவத்தினருடன்சென்றுமேற்படிகுண்டுகளை மீட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.(இ-60)

# கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தினால் ஆங்கிலம் மற்றும் சிங்கள கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சிநெறி அலகு-I, அலகு II என இரு அலகுகளைக் கொண்டது.

இதில் அலகு I திறந்த பயிற்சி நெறியாகவும் அலகு II அனுமதிப் பரீட்சை மூலமும் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இப்பயிற்சி நெறிக்கு கல்விசார் அரச ஆசிரியர்கள், அதிபர்கள், அலுவலர்கள் ஆகியோர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

மேற்படி பயிற்சிநெறி வார முடிவில் சனி அல்லது ஞாயிறு தினங்களில் யாழ்.மத்திய கல்லூரி நிலையத்தில் நடத்தப்படும்.

இக்கற்கை நெறிகள் தொடர்பான விண்ணப்பங்கள் அரசாங்க பத்திரிகை மூலம் கோரப்பட்டுள்ளது.

பத்திரிகை மூலம் தகவல் பெற முடியாதவர்கள் யாழ்.மத்திய கல்லூரி உப அதிபரிடமும் கே.கே.எஸ். வீதி நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள ஞானம்புத்தகசாலையில்விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதிக்கு முன்பதாக இணைப்பாளர் ALIC மத்திய கல்லூரிக்கு அல்லது தேசிய கல்வி நிறுவகம், மஹரகம எனும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்க முடியுமென யாழ்.மாவட்ட தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் கலாநிதி நாகமுத்து தணிகாசலம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமெனின் 077 3077563, 07777 03776 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ



வடக்கிலுள்ள மத்திய மற்றும் மாகாண அரச அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் பங்கு பற்றலுடன் போசாக்கு பன்முக செயற்றிட்டம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, தேசிய போசாக்கு செயலகத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:– என்.குமார்)

பிச்சை எடுத்தாராம் பெருமாள்
அதையும் தட்டிப் பறித்தாராம் அனுமார்.
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மீட்கப்படாத அடகு நகை ஏல விற்பனை செய்யப்படும்

அடகு வைத்த நகைகள் ஏல விற்பனை என்ற விளம்பரங்களுக்கு இப்போது குறைவேயில்லை. அதிலும் வடக்கு மாகாணத்திலேயே அடகு நகைகளின் ஏல விற்பனை அதிகம் என்ற தகவலும் இங்கு நோக்குதற்குரியது.

அடகு நகைகள் ஏலவிற்பனை செய்யப்படுகின்றன என்பதற்குள் இருக்கக்கூடிய மன அழுத்தங்கள், துயரங்கள், குடும்பங்களிடையே ஏற்படக்கூடிய கசப்பு நிலைகள் என்பவற்றுக்கு அப்பால் காலாகாலமாக பேணிப் பாதுகாக்கப்பட்ட அணிகலன்களின் இழப்பு என்பது மனித வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை என்பதையும் உணர்ந்தாகவேண்டும்.

தங்கத்தின் விலை உச்சம் அடைந்தபோது வைக்கப்பட்ட அடகு நகையை தங்கத்தின் விலை குறைவடைந்த நேரத்தில் மீட்பது என்பது முதல் நட்டம் என்றாகி விடுகிறது.

தங்கத்தின் விலை உச்சமாக இருந்தபோது நகைகளை அடகு வைக்காமல் விற்பனை செய்திருந்தால் எங்களுக்கும் உபத்திரம் இருந்திருக்காது என்று நினைக்கும் அளவிலேயே அடகு நகைளின் நிலைமை இருக்கின்றன.

எதுவாயினும் அடகு நகைகளை விற்பனை செய்வதற்கு முன்னதாக உரியவர்களுக்கு அறிவித்தல்களை வழங்குவது வங்கிகளின் கட்டாயக் கடமை. தேவைப்படும் சந்தர்ப்பத்தில் கால அவகாசம் வழங்கப்படுவது அவசியம்.

எனினும் யாழ்ப்பாணத்தில் சில வங்கிகள் எந்தவித அறிவித்தல்களும் இல்லாமல் அடகு நகைளை விற்பனை செய்துள்ளதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கும் ஆதங்கம் மிகப் பெரும் வேதனையைத் தருகிறது.

காலாகாலமாகப் பேணிப் பாதுகாத்த தங்க ஆபரணத்தை, நம்பிக்கையின் அடிப்படையில் வங்கியில் அடகு வைத்ததற்காக, எவ்விதமான அறிவித்தலும் இன்றி அந்த நகையை விற்பனை செய்வது என்பது மிகப்பெரிய அத்துமீறல் செயலாகும்.

அடகு நகைகளை வெறும் அடகு நகையாகப் பார்க்காமல், அடகில் இருக்கக் கூடிய தங்கத்தாலி உரியவர்களுக்கு எத்துணை பெறுமதியானது என்பதை உணருகின்ற மனநிலை வங்கிகளுக்கு இருக்க வேண்டும். இவை அடிப்படையானவை.

இருந்தும் அடிப்படைகளைப் பேணவேண்டிய வங்கிகள் அவற்றை பேணாமல் விட்டுள்ளதுடன் எதேச்சாதிகாரமாக நடந்துள்ளமை தமிழர்களின் அடகு நகை என்பதாலா? என்ற கேள்வி எழுகிறது.

தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கி ஒன்று அடகு நகைகளை விற்ற சம்பவம் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. நகை ஒன்றை அடகு வைத்தவர் அதற்குரிய வட்டியை மாதாமாதம் செலுத்தி வந்துள்ளார்.

வட்டியைச் செலுத்திய நகை உரிமையாளர் அதை மீட்கச் சென்ற போது, அந்த நகை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

ஏலத்தில் நகையை விற்றிருந்தால் இந்த மாதமும் நான் வட்டி கட்டி இருக்கிறேனே என்று உரியவர் கூற அந்தரப்பட்டுப் போன வங்கி, அவசர அவசரமாக வட்டிப் பணத்திற்கு காசோலை எழுதிக் கொடுத்துள்ளது. உரியவர் இன்னமும் வங்கி முகாமையாளரைச் சந்திக்க முடியாது இருப்பது வேறுகதை.

இவ்வாறாக வங்கிகளின் அடகு நகை ஏலம்; ஒழுங்குபடுத்தலின்றி நடந்தேறுவது முற்றுமுழுதாகத் தடுக்கப்பட வேண்டும்.

உரிய காலத்தில் அடகு நகைகளை மீட்காமல் விட்டால் உரியநடவடிக்கை எடுப்பது வங்கியின் கடமையாயினும் உரிய அறிவித்தல்களை உரியவர்களுக்கு வழங்காமல் செயற்படுவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

ஆகையால், அடகு நகை ஏல விற்பனையில் மிக மிக நிதானமாக செய்படுவதை வங்கி நிர்வாகங்கள் உறுதி செய்ய வேண்டும்.

## தப்பிச் சென்ற இருவர் கைது

(கொழும்பு)

பொலிஸார் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலில் படையில் இருந்து தப்பிச் சென்ற இவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொரவக்க பிரதேசத்தில் இந்த சுற்றிவளைப்பு தேடுதல் நடத்தப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மற்றைய நபர் ஆறு மாதங்களுக்கு முன்னர் கடற்படையில் இருந்து தப்பிச் சென்றிருந்தார் எனவும் பொலிஸார் கூறியுள்ளார். (இ)

## குளவி கொட்டியதில் 10 பேர் காயம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கோட்டைகட்டியகுளம் கிராமத்தில் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் பால் சேகரிப்பு நிலையத்திற்கு பால் வழங்குவதற்காக கொண்டு சென்ற பத்து பால் பண்ணையாளர்களுக்கு மரமொன்றில் இருந்து கலைந்து சென்ற குளவிகள் கொட்டியதன் காரணமாக வைத்தியசாலையில் 10 பேர் அனுமதிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது.

குளவி கொட்டிய பத்து பேரும் அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அன்றைய தினம் சிகிச்சை பெற்று ஏழு பேர் வீடு திரும்பிய நிலையில். நேற்றைய தினம் சனிக்கிழமை இருவர் வீடு திரும்பியுள்ளனர்.

ஒருவர் மட்டும் தொடர்ந்து சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல் தெரிவிக்கின்றது.

இச்சம்பவத்தின்போது பால்கொண்டு வந்த கொள்கலன்கள் குளவித் தாக்கத்தினால் பண்ணையாளர்கள் கீழே விழுந்த போதும் பால் சிந்தாதவாறு பாதுகாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-2,15)

## குளவிக்கூடு குரங்கால் கலைப்பு கொட்டுக்கு இலக்காகி ஒருவர் பலி

திம்புள்ள பத்தனை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட பத்தனை போகாவத்தை பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் வழிபாட்டு தலம் ஒன்றில் பூசைகளில் ஈடுபட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவர்கள் மீது குளவிகள் தாக்கியதில் ஒருவர் உயிரிழுந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 4 ஆண்களும். 3 பெண்களும் அதோடு 4 சிறுவர்களும் குளவிக் கொட்டுக்கு இலக்காகி கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது மரத்தில் கட்டியிருந்த குளவிக் கூட்டை குரங்கு ஒன்று கலைத்ததன் காரணமாகவே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கானதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.இவ்வாறு உயிரிழந்தவர் போகாவத்தை பகுதியை சேர்ந்த கிட்ணன்சிவப்பிரகாசம்(வயது - 59) 3 பிள்ளைகளின் தந்தையாவார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(இ)

## மண்டைதீவு திருவெண்காட்டில் இன்று

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் ஆலய 2-ம் திருவிழா ஆகிய இன்று மாலை 5.00 மணிக்கு பத்மநாதன் சிவமைந்தனின் இசைக் கச்சேரியும் இரவு 7.30 மணிக்கு ஆசிரியர் கு.பாலஷண்முகனின் தெய்வீக உரையும் இடம்பெறும். (ந)

## யாழ்ப்பாண சிறுவர்கள் இருவரை பெற்றோரிடம் ஒப்படைக்க உத்தரவு

ஜோர்தானிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட யாழ். சிறுவர்கள் இருவரையும் பெற்றோர்களிடம் ஒப்படைக்குமாறு நீர்கொழும்பு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

போலி கடவுச் சீட்டைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்வதற்காக அழைத்துச் செல்லப்பட்ட போது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவரும் இரு சிறுவர்களும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

திருப்பி அனுப்பப்பட்ட இவர்கள், கடந்த செவ்வாய்க்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

அதன்பின்னர் நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட போது குறித்த பெண்ணை விளக்கமறியலில் வைக்குமாறும், இரு சிறுவர்களையும் சிறுவர் பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்குமாறும் நீதவான் உத்தர விட்டார்.

இந்நிலையில். நேற்றுமுன்தினம் நீர்கொழும்பு நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த இரு சிறுவர்களினதும் பெற்றோர்கள் நீதிமன்றிற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

வழக்கு விசாரணையின் போது இரு சிறுவர்களையும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பிணையில் பெற்றோர்களிடம் ஒப்படைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மேலும் திருப்பி அனுப்பப்பட்ட பெண்ணை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பூர்ணிமா பரனகமகே உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சோதி ஜெசுந்தா என்ற பெண்ணே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.(இ)

## தமிழருவி-2014

வெள்ளி விழாக்காணும் மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் பெருமையுடன் வழங்கும் தமிழருவி - 2014 இன்று பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் மொறட்டுவ பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ.கே.டயில்யு. ஜெயவர்த்தன தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வீரகேசரிப் பத்திரிகை ஆசிரியர் சு.பிரபாகர், சக்தி ரி.வி.முகாமையாளர் ஐயாத்துரை கஜமுகன், Blue ocean குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சி.துமிலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ

## இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக இந்தியாவில் இன்று போராட்டம்

### நாம் தமிழர் கட்சி ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐ.நா பொதுச்சபையில் உரையாற்றுவதை தடுத்து நிறுத்தக் கோரி போராட்டம் நடத்தப் போவதாக நாம் தமிழர் கட்சி அறிவித்துள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில், தமிழ் உறவுகள் இனப்படுகொலையில் ஐ.நா. மனித உரிமை ஆணையம் இந்தியாவிற்கு வந்து விசாரணை நடத்த அனுமதி வழங்க வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ஐ.நா பொதுச் சபையில் உரையாற்றுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் உறவுகளிடத்தில் விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் முழக்கப் பட்டினிப் போராட்டம் நடத்தப்படும் எனறு நாம் தமிழர் கட்சியின் தலைமை நிர்வாகி சி.தங்கராசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ)

## தலைமைத்துவ பயிற்சிக்கான பேருந்து சேவை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புதிய மாணவர்களுக்கு மின்னேரியாவில் நடைபெறும் தலைமைத்துவ பயிற்சிக்குச் செல்வதற்காக அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விசேட பேருந்து சேவை எதிர்வரும் 6ஆம் திகதி காலை 6.30 மணி தொடக்கம் மாணவர்களின் வருகைக்கு ஏற்ப யாழ். மத்திய பேருந்து நிலயத்திலிருந்து மின்னேரியா வரை சேவையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே யாழ்ப்பாணத்தில் இருந்து மின்னேரியா செல்லும் மாணவர்கள் யாழ்.மத்திய பேருந்து நிலைய அலுவலகத்தில் ஆசன முற்பதிவுகளை செய்து கொள்ளலாம் என வடக்கு சாலை இலங்கை போக்குவரத்து சபை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் அறிவித்துள்ளார். (இ


## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எங்கள் குருநாதன்



தேடாமல் தேடன்றா னெங்கள்குரு நாதன்
சிவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடன்றா னெங்கள்குரு நாதன்
நல்லவழி தோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடன்றா னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்
வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன்

# உத்சேயா ஹாட்ரிக் தென்னாபிரிக்கா வெற்றி







சிம்பாவே அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

சிம்பாவே தலைநகர் ஹராரேவில் நடைபெற்று வரும் முக்கோணத் தொடரில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, சிம்பாவே அணிகள் மோதின.

இந்தத் தொடரின் மூன்றாவது போட்டியில் தென்னாபிரிக்கா சிம்பாவே அணிகள் நேற்றுமுன்தினம் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய தெனனாபிரிக்க அணி 49.5 ஓவர்களில் 231 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழுந்தது.

ஒரு விக்கெட்டுக்கு 142 ஓட்டங்கள் எடுத்து இருந்த தென்னாபிரிக்க அணி அதன் பின்னர் சிம்பாவே பந்து வீச்சில் விக்கெட்டுக்களை வேகமாக இழந்தது. அதிகபட்சமாக குயின்டான் டீ காக் 76 ஓட்டங்களும், ஹசிம் அம்லா 66 ஓட்டங்களும் எடுத்தனர்.

சிம்பாவே அணி தரப்பில் உத்சேயா 27 ஆவது ஓவரில் அடுத்தடுத்து 3 விக்கெட்டுக்களை சாய்த்து ஹாட்ரிக் சாதனை படைத்தார்.

இதன் மூலம் ஒருநாள் போட்டியில் ஹாட்ரிக் சாதனை படைத்த இரண்டாவது சிம்பாவே வீரர் என்ற பெருமையை பெற்றார்.

232 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய சிம்பாவே அணி 38.3 ஓவர்களில் 170 ஓட்டங்களில் சுருண்டது.

இதனால் தென்னாபிரிக்க அணி 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப்போட்டி தொடரில் தென்னாபிரிக்க அணி பெற்ற இரண்டாவது வெற்றி இதுவாகும். இப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஹாட்ரிக் சாதனை படைத்த சிம்பாவே அணியின் உத்சேயா தெரிவானார். (க)

# ரெய்னா விளையாடும் விதம் அருமையாக உள்ளது : கங்குலி



சுரேஷ் ரெய்னா எடுத்த ஓட்டங்களை விட அவர் விளையாடிய விதம் அருமையாக இருந்ததாக முன்னாள் இந்திய அணித்தலைவர் கங்குலி கூறியுள்ளார்.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய அணி டெஸ்ட் தொடரில் மோசமான தோல்வியை தழுவியது. இதைத் தொடர்ந்து ஒருநாள் தொடரின் முதல் போட்டி மழையால் கைவிடப்பட்டது.

2 ஆவது ஒருநாள் போட்டியில் இந்தியா அபாரமாக விளையாடி இங்கிலாந்தை வீழ்த்தியது. இதில் ரெய்னா சதம் விளாசி நம்பிக்கை அளித்தார்.

இது பற்றி அவர் கூறுகையில், கடினமான சூழ்நிலையில் சுரேஷ் ரெய்னாவின் இன்னிங்ஸ் அருமையாக இருந்தது. சுரேஷ் ரெய்னா எடுத்த ஓட்டங்களை விட அவரது இன்னிங்ஸ் மிகவும் மதிப்பும், முக்கியத்துவமும் வாய்ந்ததாகும்.

ஒருநாள் போட்டியில் அவரது சிறந்த இன்னிங்ஸ் இதுவாகும். வீரராக அவருக்கு இது மிகச்சிறந்த தொடக்கம் என்று நான் நம்புகிறேன்.

இந்திய துணை கண்டத்துக்கு வெளியே சதம் அடிக்காதது சுரேஷ் ரெய்னாவுக்கு நீண்ட கால பிரச்சினையாக இருந்தது. இந்தசதம், வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான களத்தில் தன்னால் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கையை ரெய்னாவுக்கு நிச்சயம் அளித்து இருக்கும். அடுத்த 6 மாதங்களில் நடக்க இருக்கும் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து தொடரில் 5 ஆவது வரிசை வீரரின் இடம் முக்கியமானதாக இருக்கும்.



சுரேஷ் ரெய்னாவின் ஆட்டம் இந்திய அணியில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். டெஸ்ட் போட்டிக்கு பின்னர் புதிய வீரர்கள் சேர்க்கப்பட்ட நிலையில் இந்திய அணி மீண்டும் நம்பிக்கையை பெற இத்தகைய ஆட்டம் அவசியமானதாக இருந்தது.

தென் ஆபிரிக்கா மற்றும் நியூசிலாந்து தொடரில் அடுத்தடுத்து 7 ஒருநாள் போட்டியில் இந்திய அணி தோல்வி கண்டதன் மூலம் அந்த நம்பிக்கையில் குறைவு ஏற்பட்டது. கார்டிப்பில் ரெய்னாவின் ஆட்டத்தை பார்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டு இருப்பது தெரிகிறது.

சமீப காலங்களில் தொடர்ச்சியாக 300 ஓட்டங்களுக்கு மேல் விட்டுக்கொடுத்து வந்த நமது பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சு இந்த ஆட்டத்தில் நன்றாக இருந்தது. (க)

## அஸ்வினுக்கு அர்ஜூனா விருது



இந்தியக் கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வினுக்கு அர்ஜூனா விருது வழங்கப்பட்டது. எனினும் அவர் இங்கிலாந்தில் கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறார் என்பதனால் நேரில் விருதைப் பெறவில்லை.

இந்திய அரசாங்கம் சர்வதேச அரங்கில் சிறப்பாக விளையாடிய வீரர்களுக்கு வருடந்தோறும் அர்ஜூனா விருது வழங்கிக் கௌரவிக்கின்றது. இந்த வருடமும் 15 விளையாட்டு வீரர்களுக்கு அர்ஜூனா விருது வழங்கப்பட்டது. இந்த பரிசு வழங்கும் விழா நேற்று முன்தினம் இந்திய ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இதில் வேகமாக 100 டெஸ்ட் விக்கெட்களைக் கைப்பற்றிய மைக்காகவே அவருக்கு அர்ஜூனா விருது வழங்கப்பட்டுள்ளது. அர்ஜூனா விருது பெறும் வீரர்களுக்கு 5 இலட்சம் இந்திய ரூபா (இலங்கை மதிப்பில் 12 இலட்சம் ரூபா) பணப்பரிசாக வழங்கப்பட்டது. (க)

## இந்தியன் சூப்பர் லீக் காற்பந்து; சென்னை அணியில் ரொனால்டினோ?



இந்தியன் சூப்பர் 'லீக்' காற்பந்து போட்டித் தொடர் ஒக்டோபர் 12 ஆம் திகதி முதல் டிசெம்பர் 20 ஆம் திகதி வரை இந்தியாவில் நடக்கிறது.

இதில் சென்னை, கேரளா, கொல் கத்தா, மும்பை உட்பட 8 அணிகள் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அணியிலும் நட்சத்திர வீரர்களை சேர்க்கும் பணி நடந்து வருகிறது. இந்த நிலையில் சென்னை டைட்டான்ஸ் அணியில் ஓய்வு பெற்ற பிரேசில் அணியின் நடசத்திர வீரர் ரொனால்டினோவை சேர்க்க முயற்சி நடப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதுபற்றி அவரது சகோதரரும், ஏஜெண்டுமான ராபர்ட்டோவிடம் பேசப்பட்டு வருகிறது. அவர் 2 வருடம் ஒப்பந்தம் செய்யப்படும் வகையில் பேச்சு நடந்து வருகிறது. (க)

# காணாமல் போனோரை...

ஐ.ஆர்.ஐ.என் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொறுப்புக்கூறும் விவகாரத்தை பல வருடங்களாக தாமதப்படுத்தி வரும் இலங்கை அரசாங்கம், தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் தவறியுள்ளது. இவற்றைக் கருத்தில் எடுக்கும்போது, இலங்கை அரசாங்கம் தண்டனையிலிருந்து தான் தப்பிக் கொள்ள நினைக்கும் அதேவேளை, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதிலும் பின் நிற்கிறது என்பது புலனாகிறது.

இலங்கையில் போர் முடிவடைந்து 5 வருடங்கள் கழிந்து விட்ட போதிலும், அங்கு போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புக்களாலும் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை.

போரால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு உண்மையான நீதி கிடைப்பதை உறுதிசெய்வதற்கு சர்வதேச சமூகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளை அனுமதிப்பதில்லை என்ற நிலைப்பாட்டை இலங்கை அதிகாரிகள் கொண்டுள்ளனர்.

எனவே இலங்கையில் காணாமற்போனோரைத் தேடும் நடவடிக்கையும், நீதி வழங்குதற்கான வலுவான பொறிமுறையும் ஒரே நேரத்தில் அவசியமாகவுள்ளது.

இலங்கையில் காணா மற்போன ஆயிரக்கணக்கான மக்களைக் கண்டுபிடிப்பதற்கான வலுவான பொறிமுறை உடனடியாக தேவை. அதேபோன்று பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டோருக்கு நீதியும் உண்மையும் மிகவும் அவசியம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச காணாமற்போனோர் தினம் நேற்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய இயக்குநர் ரிச்சர்ட் பெனாட் இவ்வாறு தெரிவிததுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# 208 பவுண்...

திருமணச் சடங்கிற்கு வெளிநாடு ஒன்றில் இருந்து வருகை தந்திருந்தவர்களின் பெரும் தொகையான வெளிநாட்டு நாணயங்களும், 200 பவுண் நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

திருமணச் சடங்கிற்கு வருகை தந்திருந்தவர் ஒருவருடைய உதவியுடனேயே மேற்படி கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று தென்மராட்சி வதிரிப் பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் நேற்று அதிகாலை வேளை உள்நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்த 8 பவுண் நகைகளையும் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணத்தினையும் கொள்ளையத்துச் சென்றுள்ளனர்.

மேற்படி கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக அந்தந்தப் பகுதி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் அடிப்படையில் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சம்பவ இடத்தில் இருந்த தடயங்களையும் பதிவு செய்து சென்றுள்ளனர்.

கோண்டாவில் பகுதியில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவம் தொடாபாக நடைபெற்ற விசாரணையின் போது மோப்ப நாய்களும் கொண்டு வரப்பட்டு தடயங்கள் ஆராயப்பட்டிருந்தது. (செ-4,60)

# காணாமல் போனோர்...

கும் நிகழ்வு தோல்வியில் முடிவடைந்தது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேறறு காலை காணாமல் போதலுக்கு எதிரான சர்வதேச நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதன்போது அரசியல் பிரமுகர்களின் உரைகள் உட்பட பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றிருநதன.

இதனையடுத்து ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் அனுப்பி வைப்பதற்காக வவுனியா அரசாங்க அதிபரிடம் மகஜரொன்று கையளிப்பதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிவசக்தி ஆனந்தன், வினோநோகதாரலிங்கம், எம். சுமந்திரன், எஸ் சரவணபவன், வட மாகாண சபை அமைச்சர்களான ப.சத்தியலிங்கம், பா.டெனிஸ்வரன், வட மாகாண சபை உறுப்பினர்கள் இ.இந்திரராஜா, எம். தியாகராஜா, து.ரவிகரன், சி.சிவமோகன், அனந்தி சசிதரன், சிராய்வா, ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக இணைப்பாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி. பாஸ்கரா மனித உரிமை செயற்பாட்டாளர் நிமல்கா பெர்ணாண்டோ உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதற்கான நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்கள் ஊர்வலமாக வவுனியா மாவட்ட செயலகம் வரை செல்வதற்கு தீர்மானித்து நகரசபை மண்டபத்திற்கு வெளியில் வந்ததும் பொலிஸார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரனிடம் ஊர்வலமாக செல்ல அனுமதி இன்மையால் அவ்வாறு செல்ல வேண்டாம் எனக் கூறினர்.

எனினும் பாராளுமன்ற உறுப்பினர் நாம் எவருக்கும் தொந்தரவின்றி வீதியோரமாக எமது காரியமொன்றிற்காக செல்லப்போகின்றோம் என தெரிவித்து நடந்து சென்றனர்.

இவருடன் அரசியல் பிரமுகர்கள் காணாமல் போனோரின் உறவுகள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பலரும் சென்ற சமயம் நகர சபை வாயிலுக்கு அருகாமையில் கலவரத்தடுப்பு பொலிஸாரினால் தடைகள் போடப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதன்போது ஊாவலமாக சென்றவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. கலவரத்தடுப்பு பொலிஸாரை தள்ளியவாறு சிலர் பொலிஸாரை கடந்து சென்றனர்.

எனினும் ஏனையோரை பொலிஸார் தடுத்து நிறுத்தியதுடன் ஒவ்வொருவராக செல்லுமாறு பணித்தனர். இதன் பின்னர் பகுதி பகுதியாக வந்தவர்கள் மீண்டும் ஏ9 வீதிக்கு அருகாமையில் வைத்து ஒன்று திரண்டு பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாக செல்ல முற்பட்டனர்.

இதனையடுத்து மீண்டும் பொலிஸார் தடை விதித்ததுடன் எக் காரணம் கொண்டும் செல்ல அனுமதிக்க மாட்டோம் என தெரிவித்தனா. இதனால் மீண்டும் ஊர்வலமாக சென்றவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது.

இந் நிலையில் ஊர்வலமாக சென்றவர்கள் வீதியின் குறுக்காக அமர்ந்து கொண்டதும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன் போக்குவரத்து தடைப்பட்டுக்கொண்டது.

இவ்வாறு வீதியில் அமர்ந்தவர்கள் ஜனாதிபதிக்கு எதிராகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸாருக்கு எதிராகவும் கோசங்களை எழுப்பினர்.

இவ்வாறான நிலையில் பொலிஸாருடன் பேச்சுக்களை நடத்திய செபமாலை அடிகளார் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கருத்து ஒருமைப்பாட்டுக்கு வந்து வீதியில் இருந்தவர்களிடம் இங்கு பல்வேறானவர்கள் நுழைந்துள்ளனர். எவ்விதமான பாரதூரமான நிகழ்வுகள் ஏறபடுவதற்கான வாய்ப்புகள் வரலாம் என்பதனாலும் நேறறு மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் உட்பட யாரும் அற்ற நிலை காணப்படுவதனாலும் நாம் சமர்ப்பிக்கவுள்ள மகஜரை பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் கையளிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தனா.

எனினும் சிலர் எதிர்ப்பு தெரிவித்திருந்தாலும் முன்னின்று நிகழ்வினை நடத்துவதற்கு செயற்பட்ட பலரும் சம்மதம் தெரிவித்ததையடுத்து ஏ9 வீதியில் நீதிமன்ற வளாகத்திற்கு அண்மையில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் மகஜர் கையளிக்கப்பட்டதன்பின்னர் அனைவரும் கலைந்து சென நிருந்தனர். (செ-11, 250)

## யாழில் முதன் முறையாக

# ஆவணி சதுர்த்தியை முன்னிட்டு விநாயகர் சிலை கடலில் கரைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக ஆவணி விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நேறறு சனிக்கிழமை கீரிமலையில் விநாயகர் சிலை கடலில் கரைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கோண்டாவில் கிழக்கு சபரிமலை ஐயப்பன் ஆலயத்தில் இருந்து நேறறு முற்பகல் 10 மணியளவில் விநாயகர் சிலை வாகனத்தில் ஊர்வலமாக எடுததுச் செல்லப்பட்டது. வீதி ஊர்வலம் பலாலி வீதி வழியாக உரும்பிராய் சந்தியை அடைந்து அங்கிருந்து உரும்பிராய், மருதனார்மடம் வீதி வழியாக மருதனார்மடம் சென்று அங்கிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக மாவிட்டபுரம் சென்றடைந்தது.

கீரிமலையை பிற்பகல் 1.30 மணியளவில் சென்றடைய அங்கு அடியவர்களின் அரோகரா கோசத்தின் மத்தியில் கடலினுள் விநாயகர் சிலை எடுத்துச் செல்லப்பட்டு கடல் நீருடன் கரைக்கப்பட்டது. இந்தியாவில் விநாயகர் சிலை ஆவணி சதுர்த்தியை முன்னிட்டு கடல்கள், ஆறுகளில் பூசை வழிபாடுகளுடன் கரைக்கப்படுவது வழக்கம்.

யாழ்ப்பாணத்தில், முதற் தடவையாக ஆவணி சதுர்த்தியை முன்னிட்டு விநாயகர் சிலை கடலில் கரைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

## நிதிநியதிச் சட்டம் ஆளுநரிடம் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

சர்ச்சைக்குரிய வடக்கு மாகாண சபையின் நிதிநியதிச்சட்டம் திருத்தங்கள் செய்யப்பட்ட நிலையில் ஆளுநரின் ஒப்புதலுக்காக (சம்மதம்) அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவைத் தலைவர் ச.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண் சபையின் நிதி நியதிச்சட்டம், முதலமைச்சர் நியதிச்சட்டம், முத்திரை கைமாற்று நியதிச்சட்டம் என்பன வ்டக்கு மாகாண சபையின் கடந்த 05 ஆம் திகதி அமர்வில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அதேவேளை நிதிநியதிச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்யுமாறு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பரிந்துரை செய்திருந்தார்.

இந்நிலையில் ஆளுநரின் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டு நிதி நியதிச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்காக நேற்றுமுன் தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவைத்தலைவர் சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் நிதி நியதிச்சட்டம் உள்ளிட்ட நியதிச்சட்டம் மாகாணசபை உருவாக்கப்பட்டதற்கு பின்னர் பல மாதங்கள் கடந்த நிலையிலேயே தயார் படுத்தப்பட்டது. இந் நிலையில் வடக்கு ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு பல திருத்தங்களுக்குட்படுத்தப்பட்டு தாமதிக்கப்பட்ட நிலையில் மாகாண சபையின் அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# மாணவிகள் மூவர்...

சென்றுள்ளார்.

ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய் மற்றும் இரண்டு பெண் பிள்ளைகளும் மற்றும் அவவூரைச் சேர்ந்த ஒரு பெண் பிள்ளையும் சென்றுள்ளனர்.

தாயார் குளத்தின் அருகில் குளித்துக் கொண்டு இருந்துள்ளார். ஏனைய மூன்று பெண் பிள்ளைகளும் தாயாரை விட்டு விலத்தி சென்று சற்று தொலைவில் குளித்துக் கொண்டு இருந்துள்ளனர்.

தாயார் திடீர் என அவதானித்த போது அம் மூன்று பெண் பிள்ளைகளும் குளத்தினுள் காணாமல் போயிருந்தனர்.

பதறிப் போன அப் பெண் உடனடியாக கூக்குரல் இட்டு அவ் ஊர் மக்களை அழைத்துள்ளார்.

உடனடியாக விரைந்து செயற்பட்ட நூற்றுக்கணக்கான அவ் ஊர் மக்களும் இராணுவத்தினரும் கடுமையாக போராட்டத்தின் மத்தியில் அம் மூவரையும் குளத்தினுள் புதையுண்ட நிலையில் சடலமாக மாலை 5.30 மணியளவில் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் ஆரம்ப கட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வரட்சி காரணமாக இப் பகுதி வீடுகளினுள் கிணற்று நீர் வற்றி செல்வதாலேயே குளத்தில் குளிக்கச் சென்று சகதியில் சிக்கி இம் மூன்று மாணவிகளும் உயிரிழந்தமையால் கிளிநெர்ச்சி நகர் நேற்று சோகமயமாகியது. (செ-15.271)

# சிறுபான்மையினர்...

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பௌத்த கடும்போக்குவாத நடவடிக்கைகள் கவலையளிக்கும் வகையில் அமைந்துள்ளது. இலங்கை மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளில் பௌத்த கடும்போக்குவாதம் அண்மைக்காலமாக தலைதூக்கியுள்ளமை வருத்தமளிக்கின்றது. இலங்கையில் சிறுபான்மை மதச் சமூகத்தவர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

அனைத்து இன மக்களினதும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது அந்நாட்டு அரசாங்கத்தினதும் மதத்தலைவர்களினதும் பொறுப்பாகும்.

மதத்தில் பெயரால் வன்முறைகளில் ஈடுபடுவது, மதங்களின் அடிப்படை கொள்கைகளுக்கு புறம்பானது. மதக் குரோதங்களுக்கு எதிராக நாட்டின் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டியது அவசியமானது. மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

சில பௌத்த மதத் தலைவர்கள் சிறுபான்மை சமூகத்தின் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட தூண்டுகின்றனர் இது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

இன மத அடிப்படையில் தண்டிக்கப்படும் நிலைமை மற்றும் யுத்தத்தில் சிக்கி பாதிக்கப்படும் நிலைமை குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது. உலகின் அனைத்து பிரதான சமய நெறிகளும் அன்பையும் சமாதானத்தையுமே வலியுறுத்தி வருகின்றது.

கடும்போக்குவாதிகள் மட்டுமன்றி அவர்களுக்கு பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்குவோரும் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

மியன்மாரில் ரொஹிங்யா இனத்தவர்கள் மீது பாரியளவில் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையிலும் மியன்மாரிலும் பௌத்த மதத்தவர்கள் மேற்கொண்டு வரும் குற்றச் செயல்கள், பௌத்த மத ஸ்தாபகரான கௌதம புத்தரின் கொள்கைளுக்கு விரோதமானது. அது புத்தருக்கு இழைக்கும் துரோகமாக நோக்கப்பட வேண்டுமெனவும் பான் கீ மூன் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (செ-11)


## நிரந்தர தொழில்வாய்ப்பு

உங்கள் கனவு நிரந்தர தொழிலை பெறுவதாய் உடனே இன்றே அழையுங்கள். 18-50 வயது ஆண்-பெண் இருபாலாருக்கும் கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/ கோடியல்/ பிஸ்கட்/ சொக்லட்/ டொபி/ சவர்க்காரம்/டிப்டிப்/யோகட்/ இறைச்சி/ டயில்/ கிளவுஸ்/ காமெண்ட்/பிளாஸ்டிக்/வாசனைத்திரவியம் மற்றும் பல தொழிற்சாலைகளில் ⅄ உற்பத்தி ⅄ பொதியிடல் ⅄ தரம்பிரித்தல் ⅄ களஞ்சிய பிரிவு உடனடியான ஆட்சேகரிப்பு சம்பளம் 18000/=, 25000/=, 32000/= உணவு தங்குமிடம் சகாய விலைகளில். நண்பர்கள்/குழுக்களாக/ தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில். வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு.

தொடர்பு:-0771116770

(சி-8352)

# மகிந்த என்பதால் சுகவீனம் ஏற்படாதா?

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிகிச்சை பெறுவதற்காகவே அமெரிக்கா சென்றுள்ளதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கருத்து வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு செல்ல முடியாதா? அவர் மருந்துகளை எடுக்க முடியாதா? சுகவீனம் ஏற்பட்டால் மருந்தெடுப்பதையும் ஊடகங்களுக்கு சொல்ல வேண்டுமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதியும் சாதாரண மனிதர்தான். அவருக்கு காய்ச்சல், தடிமன் ஏற்படாதா? சுகவீனம் என்பது ஜனாதிபதி என்றில்லை. எல்லோருக்கும் ஏற்படும் எனவும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார். கடந்த சில தினங்களுக்கு திடீர சுகவீனம் காரணமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவசரமாக அமெரிக்கா சென்றிருந்ததாக ஊடகங்களில் செய்தி வெளியானமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


பிறந்தநாள், திருமண பலூன் வளையங்கள் செய்யும் அலங்கரிப்பாளர்களின்
**கவனத்திற்கு!!!**

எம்மிடம் பிறந்தநாள் போன்ற விசேட வைபவங்களுக்கு கட்டும் பலூன் வளையங்களுக்குப் பயன்படுத்தும் தரமான பலூன்கள் மிகக்குறைந்த விலையில் விற்பனைக்குண்டு

நாடவேண்டிய இடம்: (8278)

**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி. 021-222 2567



**Personal Class-கணினி**

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்:KRC


## மீனவர் போராட்டம் முடிவு

மூன்று அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 38 நாட்களாக நடைபெற்று வந்த இராமேஸ்வரம் மீனவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இலங்கைகடற்படையினரால் சிறைபிடித்துச் செல்லப்பட்ட இராமநாதபுரம்; புதுக்கோட்டை மற்றும் நாகை உள்ளிட்ட மீனவர்களின் 63 விசைப்படகுளை விடுவிக்க வேண்டும். பாரம்பரிய கடல்பகுதியில் மீன்பிடி உரிமையை பெற்றுத்தர வேண்டும். இலங்கை கடற்படையால் சேதப்படுத்தப்பட்ட படகுகளுக்கு அரசு நிவாரணம் வழங்கவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 38 நாட்களாக இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்தநிலையில் தங்களது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு செப்டெம்பர் முதலாம் திகதி முதல் மீன்பிடிக்கச் செல்வது என இராமேஸ்வரம் துறைமுகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற மீனவர் கூட்டமைப்பு ஆலோசனை கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. (எ-11)


**NEW SCIENCE WORLD**
VICTORY MUST
Navalar road-Brown road Junction, Jaffna.
Tel: 077 336 4055
web:www.physicsocean.com Email: info@physicsocean.com
For 2014 A/L...
**DAY CLASSES**

| | |
|---|---|
| பௌதீகவியல் : | R.குகன் R.குமரன் |
| இரசாயனவியல் : | T.சிவகுமார் டயஸ் |
| உயிரியல் : | S.பொன்திவாகரன் V.உமாசங்கர் |

01.09.2014
ஆரம்பம்: திங்கள் காலை 9.30மணி

| | | |
|---|---|---|
| உயிரியல் | காலை | 07.00 - 09.00 |
| பௌதீகவியல் | காலை | 09.00 - 11.00 |
| இரசாயனவியல் | மு.ப | 11.00 - 1.00 |

(C-8277)



**NEW SCIENCE HALL**
KANNATHIDDY JAFFNA

**2015 A/L DAY CLASSES**
(2014 A/L பரீட்சைக்கு தோன்றியவர்கட்குரியது)
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

PHYSICS - 11.30
திரு.S.சோதிலிங்கம்
திரு.G.பிரபா

CHEMISTRY- 9.30
திரு.K.சிவத்திரன்
திரு.T.சுசாந்தன்

BIOLOGY - 7.00
வழமையான ஆசிரியர்
திரு.T.கெங்காதரன்

COM.MATHS - 7.00
திரு.S.செந்தில்ராஜ்
திரு.P.செந்தில்நாதன்
திரு.S.சிவகரன்

(C-8357)

ஆரம்பம்:-
01.09.2014 திங்கள் காலை 7 மணி


**WEEKEND & EVENING CLASSES**

PHYSICS
திரு.K செல்வன், திரு.N கபிலன்
MON, TUE. WED, THURS. FRI 2.00 - 3.30

CHEMISTRY
திரு.G.BENO, திரு.J றஞ்சித்காந்
WED, FRI, SAT& SUN 3.30 - 5.00



**75 ஆவது பிறந்த தின நல்வாழ்த்துக்கள்**




31.08.2014

**ஏ.ஜெகதீஸ்வரன்**

அன்பினால் எமையெல்லாம் உருக்கி
அறிவினால் எமை வளர்த்து
பாசத்தினால் பகுத்தறிவினையூட்டி
எம்மை வழிப்படுத்திய - அப்பாவிற்கு
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அன்புடன் வாழ்த்துவோர்
மனைவி,பிள்ளைகள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

(7629)



**இருமனங்கள் இணையும் திருமண நன்நாளில் வாழ்த்துகின்றோம்**




இன்று திருமண பந்தத்தில் இணையும் எமது ஆசிரிய நண்பனும் மருதானை தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளருமான P.உமாசங்கர் அவர்களையும் அவருடன் திருமண பந்தத்தில் இணையும் நிறஞ்ஜனி அவர்களையும் சீரும் சிறப்புடன் பதினாறும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்:- P.கமல்தாசன் (யாழ்/இந்து மகளிர் கல்லூரி)
T.தனேந்திரன் (விரிவுரையாளர் தர்க்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரி)

(7643)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.